Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 கதிர் : 048 | புதன்கிழமை | மார்கழி 29 ஆம் நாள் 13 ஜனவரி 2021 | வள்ளுவர் ஆண்டு 2051 | பக்கங்கள்: 20 விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## வடக்கில் நேற்று 9 தொற்றாளர்

யாழ்ப்பாணம், ஜன. 13
வடக்கு மாகாணத்தில் நேற்று 9 கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள் ளனர். யாழ்ப்பாணம் 17 ➤

# இரண்டு வாரங்களுக்கு வவுனியா நகர் முடக்கம்

### 42 பாடசாலைகளும் பூட்டு

### சுகாதார திணைக்களம் அறிவிப்பு

வவுனியா, ஜனவரி 13
வவுனியா நகரிலுள்ள 19 கிராம அலுவலர் பிரிவுகளை உடனடியாக முடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதிகரித்து வரும் கொரோனாத் தொற்றாளர்களை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 17 ➤



# விடாது தொடர்கின்றது மழை வெள்ளக்காடாகிறது வடக்கு!

யாழ்ப்பாணம், ஜன. 13
வடக்கு மாகாணத்தில் மழை தொடர்ந்து பெய்துவரும் நிலையில் பெரும்பாலான இடங்கள் வெள்ளக்காடாகக் காட்சியளிக்கின்றன. கிளிநொச்சி மாவட்டத்தில் பல பகுதிகளுக்கு வெள்ள இடர் எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.
கிளிநொச்சி மாவட்டத்தில் 407 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 278 பேர் வெள்ள இடரால் நேற்று 17 ➤



## நீதிமன்ற அவமதிப்பு ரஞ்சனுக்கு 4 வருட சிறை

கொழும்பு, ஜன.13
இலங்கையில் பெரும்பாலான நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகள் ஊழல் மோசடி நிறைந்தவர்கள் என்று நீதிமன்றை, நீதித்துறையை அவ 17 ➤

## வெள்ளி வரை வடக்கில் மழை

யாழ்ப்பாணம், ஜன.13
இலங்கைக்குத் தென் கிழக்கே வங்காள விரிகுடாவில் உருவாகியுள்ள காற்றழுத் 17 ➤

## பிணையில் விடுவிக்கக் கோரி அரசியல் கைதி உணவுத்தவிர்ப்பு

*6ஆம் நாளாக தொடர்கிறது*



கொழும்பு, ஜன.13
மேன்முறையீட்டு வழக்குகள் இரண்டிலும் துரித விசாரணை சாத்தியமில்லையாயின், பிணை அனுமதி பெற ஆவண செய்து தரக்கோரி புதிய மகசின் சிறைச் 17 ➤

## மீளமைக்கப்படவுள்ள தூபி வடிவம் பழையதே; பெயர் மட்டும் வேறு!

*யாழ்.பல்கலைத் துணைவேந்தர் தகவல்*



யாழ்ப்பாணம், ஜன.13
புதிதாக அமைக்கப்படவுள்ள தூபி தொடர்பில் உரிய தரப்புக்களுடன் கலந் 20 ➤

## முள்ளியவளை சடலம்: பின்னணியில் கொலை

### ஆய்வில் வெளிப்பட்டது

முல்லைத்தீவு, ஜன. 13
முள்ளியவளை - நாவல்காடு கிராமத்தில் டிசெம்பர் 30ஆம் 20 ➤

## கச்சதீவு திருவிழாவுக்கு பக்தர்கள் 'அவுட்'!

யாழ்ப்பாணம், ஜன.13
எதிர்வரும் பெப்ரவரி மாதம் 26 ஆம் மற்றும் 27ஆம் திகதிகளில் நடைபெற 17 ➤

## இப்படியும் திருட்டு! மக்களே கவனம்

யாழ்ப்பாணம், ஜன. 13
மழை வரப் போகின்றது. உடுப்பு மாற்றுவதற்கு இடம் தாருங்கள் என்று கேட்ட பெண், வீட்டிலிருந்த நகை 17 ➤

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுனின் கரட் எதுவாயினும் அதிகூடிய முற்பணம்
அதிகபட்ச முற்பணத் தொகை
ரூ.70,000/-
0.79% மாதாந்த வட்டி வீதம் மட்டுமே
• அதிகபட்ச இரகசியத் தன்மை
• சிநேகபூர்வமான உடனடி சேவை
• சிறந்த பாதுகாப்பு
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள் அல்லது,
செலான் தங்கக் கடன் 011 200 88 88 செலான் வங்கி
Brand Finance Rating "A +" Fitch Rating: "A" (lka)

பாதுகாப்பாக உங்கள் வீட்டிலிருந்தவாறு வேலை செய்யுங்கள், கல்வி பயிலுங்கள்
மொபிடெல் வழங்கும் சிறந்த MS Teams, Zoom, Office 365, m-Learning, SLT Lynked மற்றும் SLT eSiphala டேட்டா பிளான்களை அனுபவியுங்கள்.
25GB பக்கேஜ் ரூபா. 150/- + வரிகள்
50GB பக்கேஜ் ரூபா. 590/- + வரிகள்
100GB பக்கேஜ் ரூபா. 990/- + வரிகள்
Add-on திட்டமாகச் செயற்படுத்துவதற்கு அழையுங்கள் #170# அல்லது Datamart App ஐப் பயன்படுத்துங்கள்.
இத்திட்டங்கள் விசேடமாக மேலேயுள்ள பக்கேஜ்களுக்கு மட்டுமே.
ஏனைய Data தேவைகளுக்கு Datamart App இற்குள் பிரவேசியுங்கள்.
4G LTE
SLTMOBITEL
TRC/M/Promo/20/02

# பல்கலையில் அமைவது போர் வெற்றித் தூபியா?

## சந்தேகத்துடன் கேள்வி எழுப்புகிறது தமிழ் சிவில் சமூக அமையம்

**யாழ்ப்பாணம், ஜன.13**

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் நினைவுத் தூபி அழிக்கப்பட்ட இடத்திலேயே மீள அதனை அமைப்பேன் எனச் சொல்லி அடிக்கல் நாட்டியிருப்பதை நாம் நம்பத் தயாராக இல்லை. இனப்படுகொலையை நினைவுகூரும் தூபியை நீக்கி பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவர் குறிப்பிட்டது போல 'சமாதானத் தூபியோ' அல்லது 'போர் வெற்றித் தூபியோ' அமைக்கப்படலாம் என்று நாம் அஞ்சுகிறோம். நாம் எப்படி எவ்வாறு எதனை நினைவுகூர வேண்டும் என்பதனை நாமே தீர்மானிக்க வேண்டும். இருந்த தூபி இருந்தவாறே மீள அமைக்கப்பட வேண்டும். வேறெந்த தீர்வும் திணிப்பே தவிர வேறொன்றும் இல்லை என்பதை தமிழ் சிவில் சமூக அமையம் சுட்டிக்காட்டியுள்ளது.**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்திருந்த முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட பொதுமக்களின் நினைவுச் சின்னம் அழிக்கப்பட்டமை தொடர்பாகத் தமிழ் சிவில் சமூக அமையத்தின் இணைப்பேச்சாளர்களின் ஒப்பத்துடன் வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

இந்த நினைவுச் சின்ன அழிப்புக்கு மூல காரணமாக இருப்பவர்கள் பேரினவாத அரசும், அதன் ஆயுதப் படைகளும், அதன் கருத்தியற் படைகளில் ஒன்றான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் என்பதை மிகுந்த கண்டனத்துடன் சுட்டிக்காட்டுகிறது.

பாதிக்கப்பட்ட மக்களின் உணர்வுகளை மேலும் கடுமையாகப் பாதித்து, எதிர்பாராத விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய இந்த விடயத்தில், விரிவான பல்கலைக்கழக சமூகம், பிற பங்கீட்டாளர்கள் என்போருடன் உரையாடி, ஆலோசனைகளைப் பெற்று இவ்விடயத்தைக் கையாண்டிருக்க வேண்டிய துணைவேந்தரும், பல்கலைக் கழக நிர்வாகத்தினரும், குறுகிய சுய இலாபங்களின் அடிப்படையில் அநீதியாளர்களின் கைப்பாவைகளாக மாறி, அவர்களின் நோக்கங்களை நிறைவேற்றியது மட்டுமல்லாது அதற்கான நியாயப்படுத்தல்களையும், கருத்தியல் வியாக்கியானங்களையும் வழங்கியதை ஒரு சமூக அநீதிச் செயற்பாடாகக் கருதி மிக வன்மையாகக் கண்டிக்கிறது.


தமது வார்த்தைகளாலும் செயல்களாலும் தமது சொந்த சமூகத்தின் உணர்வுகளைக் காயப்படுத்திய துணைவேந்தரும், பதிவாளரும் மக்களிடம் நிபந்தனையற்ற, பகிரங்க மன்னிப்பைக் கோர வேண்டும் என எதிர்பார்க்கிறது.

நினைவுகூரும் உரிமை ஒரு அடிப்படை மனித உரிமை. அதனை மீள நிலை நிறுத்துவதற்குத் தேவையான அனைத்து அறவழிச் செயற்பாடுகளிலும் தொடர்ச்சியாக ஈடுபட வேண்டும் எனத் தனி நபர்கள், சமூக நிறுவனங்கள், அரசியற் கட்சிகள் என அனைவரையும் வேண்டிக் கொள்கிறது.

எமது பாவனைப் பொருள்கள், பண்பாட்டு நிகழ்வுகள், கலை இலக்கிய முயற்சிகள் என அனைத்து வழிமுறைகளூடாகவும், குறியீட்டு வடிவில் எமது நினைவு கூர்தலும், நினைவு கூரும் உரிமைக்கான போராட்டமும் முன்னெடுக்கப்பட வேண்டும் என அவாவி நிற்கிறது.

தமிழ் அரசியற் கட்சிகள், கட்சி சார் அரசியற் செயற்பாடுகளுக்கு மேலாக, எமது தேசிய இனத்தின் மீது பிரயோகிக்கப் படும் அனைத்து அடக்குமுறைகளுக்கு எதிராகவும், சரிநிகர் சமானமாக இந்த நாட்டில் வாழ்வதற்கான உரிமைகளுக்காகவும், பொதுவான வேலைத்திட்டமொன்றை உருவாக்கி முன்னெடுக்க வேண்டும் எனவும் வேண்டிக் கொள்கிறது, என்றுள்ளது.

(ஒ-5)



## அக்கராயன் - முறிகண்டி வீதியின் போக்குவரத்து முற்றாக துண்டிப்பு

கிளிநொச்சி, ஜன.13

கிளிநொச்சி அக்கராயன் குளம் வான் பாய்வதால், அக்கராயன் - முறிகண்டி வீதி ஊடான போக்குவரத்து முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் மேற்குப் புறத்தில் அமைந்துள்ள அக்கராயன் குளத்தின் நீர்மட்டம் அதிகரித்து குளத்தின் வான் வழியாக ஏழு அங்குலத்துக்கு மேல் அந்த நீர் வெளியேறுவதாலேயே வீதியின் போக்குவரத்து முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளது. பொதுமக்களின் பாதுகாப்புக் கருதி படையினர் வீதியின் இரு மருங்கிலும் கடமையில் ஈடுபட்டுள்ளனர். (ப-6)

## வவுனியா மருத்துவமனையில் மூவருக்கு கொரோனாத் தொற்று

வவுனியா, ஜன.13

வவுனியா மருத்துவமனைப் பணியாளர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் மூவருக்குத் தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது. இவர்களுக்கு பி.சி.ஆர். சோதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பட்டாணிச்சூரைச் சேர்ந்த சிற்றூழியர் ஒருவருக்கும், நிர்வாகப் பிரிவைச் சேர்ந்த முகாமைத்துவ உதவியாளர் ஒருவருக்கும் நேற்றுமுன்தினம் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. அவர்களுக்கு நேற்றுக்காலை பி.சி.ஆர். சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதேவேளை நேற்றுக்காலை நிர்வாகப் பிரிவைச் சேர்ந்த மற்றொரு பணியாளருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வவுனியா நகரில் தொற்றாளர்கள் அதிகரித்து வரும் நிலையில், மருத்துவமனைப் பணியாளர்களும் தொற்றுக்குள்ளாகி வருகின்றனர். (ஒ.5)

## வவுனியாவில் 4பேருக்கு தொற்று

வவுனியா, ஜன.13

வவுனியாவில் மேலும் நான்கு பேருக்கு நேற்று மதியம் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. கடந்த சனிக்கிழமை மில் வீதியில் மேற்கொண்ட பி.சி.ஆர். பரிசோதனையில் இருவருக்கும், வவுனியா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட இருவருக்கும் நேற்று மதியம் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ஒ.19)



## அரசியல் கைதிகளின் விடுதலை வேண்டி மன்னாரில் தொடர்கின்றன வழிபாடுகள்



அரசியல் கைதிகளின் விடுதலை வேண்டி மன்னார் ஆலயங்களில் தொடர்ச்சியாக சிறப்பு வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் கடந்த ஏழாம் திகதியிலிருந்து 14ஆம் திகதி வரை தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கான பிரார்த்தனை வாரமாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அதற்கமைவாக நேற்று மன்னார் மாவட்டத்தில் உள்ள இந்து மற்றும் கிறிஸ்தவ ஆலயங்களில் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. (ப- 213)



## அரசியல் கைதிகளின் விடுதலை; திருக்கேதீஸ்வரரிடம் வேண்டுதல்

மன்னார், ஜன.13

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை வேண்டி நேற்று மதியம் மன்னார் திருக்கேதீஸ்வரர் ஆலயத்தில் விசேட வழிபாடுகள் இடம்பெற்றன.

மன்னார் மாவட்ட பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் ஏற்பாட்டில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய குடும்ப உறவுகள் மற்றும் அரசியல் கைதிகளின் உறவுகள் இணைந்து இந்த விசேட வழிபாடுகளை மேற்கொண்டனர். (ப-56)




# வான்பாய்கின்றன கிளிநொச்சிக் குளங்கள்

* இரணைமடுவின் 14 வான் கதவுகளும் திறப்பு
* தாழ் நிலப்பகுதி மக்களுக்கு வெள்ள எச்சரிக்கை
* அவதானத்துடன் செயற்படுமாறு கோரிக்கை

கிளிநொச்சி, ஜன.13

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அனைத்து நீர்ப்பாசனக் குளங்களும் வான்பாய்கின்றன. அந்தவகையில் இரணைமடுக் குளம், கல்மடுக்குளம், அக்கராயன் குளம், புதுமுறிப்புக் குளம், வன்னேரிக்குளம், கரியாலை நாகபடுவான் குளம், கனகாம்பிகைக் குளம், பிரமந்தனாறு குளம் மற்றும் குடமுருட்டிக்குளம் ஆகிய பெரிய நீர்ப்பாசனக் குளங்கள் அனைத்தும் வான்பாய்கின்றன.



இரணைமடு குளத்துக்கான நீர் வருகை அதிகரித்துவரும் நிலையில் குளத்தின் 14 வான் கதவுகளும் திறந்துவிடப்பட்டுள்ளன என நீர்பாசனத் திணைக்களம் தெரிவிக்கின்றது. இரண்டு வான் கதவுகள் 2 அடியாகவும், 4 வான் கதவுகள் 1 அடி 6 அங்குலமாகவும், 4 வான் கதவுகள் 1 அடியாகவும், 4 வான் கதவுகள் 6 அங்குலமாகவும் திறந்து விடப்பட்டுள்ளன. எனவும் நீர்பாசனத் திணைக்களம் தெரிவிக்கின்றது. தொடர்ச்சியான நீர் வருகை காணப்படுவதனால் திறக்கப்பட்ட வான் கதவுகளின் அளவுகள் அதிகரிக்கப்படலாம் எனவும், கனகராயன் ஆற்றுப் படுக்கையின் கீழ் உள்ள மக்கள் குறிப்பாக பன்னங்கண்டி, கண்டாவளை, முரசுமோட்டை, பரந்தன், ஊரியான், உமையாள்புரம் உள்ளிட்ட பகுதிகளில் வாழும் மக்கள் அவதானமாக செயற்படுமாறும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கிளிநொச்சி நீர்ப்பாசனக் குளங்களான கல்மடு குளம் 10 அங்குலமும், பிரமந்தனாறு குளம் 8 அங்குலமும், கனகாம்பிகை குளம் 5 அங்குலமும் வான் பாய்ந்து வருகின்றன.

மேலும் அக்கராயன் குளம் 7 அங்குலமும், கரியாலை நாகபடுவான் குளம் 10 அங்குலமும், புதுமுறிப்பு குளம் 8 அங்குலமும், குடமுருட்டி குளம் 7 அங்குலமும், வன்னேரிக் குளம் 4 அங்குலமும் வான் பாய்ந்து வருகின்றன.

நீர்நிலைகளை அண்மித்த மற்றும் நீர் வடிந்தோடும் பகுதிகளில் உள்ள மக்களுக்கு வெள்ள எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள நிலையில் மக்கள் தமது வாழ்வாதாரங்களைப் பாதுகாப்பதுடன், பாதுகாப்பான முறையில் நடந்துகொள்ளுமாறும் நீர்பாசனத் திணைக்களம் தொடர்ந்தும் அறிவுறுத்தி வருகின்றது.

இதேவேளை, கனகாம்பிகைக் குளம், இரத்தினபுரம், ஆனந்தபுரம் கிழக்கு, புளியம்பொக்கணை, பெரியகுளம், உழவனூர், பிரமந்தனாறு உள்ளிட்ட தாழ்வு நிலப் பகுதிகளில் வசிக்கின்ற மக்கள் அவதானமாக செயற்படுமாறு மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் அறிவுறுத்தி உள்ளது.

தொடர்ச்சியாக மழைவீழ்ச்சி பதிவாகும் என குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் மக்கள் அவதானமாக செயற்பட வேண்டும் எனவும், குளங்கள் மற்றும் நீர் தேங்கியுள்ள ஆழமான பகுதிகளை பார்வையிடச் செல்வதைத் தவிர்க்குமாறும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக சிறுவர்கள், முதியவர்கள், மாற்றுத்திறனாளிகள் போன்றோர் தொடர்பில் பொதுமக்கள் அவதானம் செலுத்த வேண்டும் எனவும், இடர்கள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் உடனடியாக கிராம சேவையாளர் ஊடாக அல்லது பொலிஸார் மற்றும் இராணுவத்தினரின் உதவியைப் பெற்றுக்கொள்ளுமாறும் மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் குறிப்பிட்டுள்ளது. (ந214,6)

# புலிகளின் சித்தாந்தம் பல்கலையில் உயிருடன்

## கொதிக்கிறது சிங்கள கடும்போக்கு அமைப்பு

கொழும்பு, ஜன. 13

போரில் புலிகள் அமைப்பு தோற்கடிக்கப்பட்டாலும் அவ்வமைப்பின் சித்தாந்தம் பல்கலைக்கழக கட்டமைப்பில் செயற்படுவது பாரதூரமான விடயமாகும் என்று நவ சிங்கள ராவய அமைப்பின் பொதுச்செயலர் மாகல்கந்தே சுதந்த தேரர் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் நினைவுத்தூபி அமைப்பதற்கு மீண்டும் அடிக்கல் நடப்பட்டுள்ள விவகாரம் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒரே நாடு, ஒரே சட்டம் தான் நாட்டில் நடைமுறையிலிருக்கும் எனக் கூறப்படும் நிலையில், அந்த சட்டம் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துக்கு பொருந்தாதா? புலிகளை நினைவுகூரும் நினைவுத்தூபியை மீண்டும் நிர்மாணிப்பதற்கு யாழ். பல்கலைக்கழகத்தின் உபவேந்தராலேயே அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இதன் பின்னணியில் வெளிநாட்டிலுள்ள புலிகளின் அழுத்தம் இல்லையா?

போரில் புலிகள் அமைப்பு தோற்கடிக்கப்பட்டாலும் அவ்வமைப்பின் சித்தாந்தம் பல்கலைக்கழக கட்டமைப்பிலும், அதன் வெளியிலும் செயற்படுவது பாரதூரமான விடயமாகும், என்றார்.

அதேவேளை, பொதுமக்களை நினைவுகூருவதற்கு நினைவுச் சின்னம் அமைப்பது தவறில்லை. ஆனால், பயங்கரவாதிகளை நினைவுகூருவதற்கு நினைவுச் சின்னம் அமைக்கப்படுமானால் அது நிச்சயம் அகற்றப்பட வேண்டும், என்று பீல்ட்மார்சல் சரத் பொன்சேகா கருத்து வெளியிட்டுள்ளார். (ஒ,44)

# தனிமைப்படுத்தலில் இருந்த பெண் தவறான முடிவெடுத்து உயிர்துறப்பு!

## பருத்தித்துறையில் சோகம்

யாழ்ப்பாணம், ஜன. 13

யாழ்ப்பாணத்தில் கொரோனாத் தொற்றாளர் ஒருவரின் தாயார் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துள்ளார். பருத்தித்துறை புலோலி பகுதியில் இந்தச் துயரச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

புலோலிப் பகுதியில் தொற்றாளராகக் கண்டறியப்பட்டவருடன் தொடர்பில் இருந்தார் என அந்தப் பகுதியில் ஆசிரியர் ஒருவர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டார்.

அவருடன் தொடர்புடையவர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர். அவரது பெற்றோரும் பிறிதொரு வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர். நேற்றைய தினம் அவர்களுக்கு பி.சி.ஆர். சோதனை மேற்கொள்ளப்படுவதாக இருந்தது. இந்த நிலையில் தொற்றாளரின் தாயார் தவறான முடிவு எடுத்து உயிரிழந்துள்ளார். (ஒ,26)

# அடுத்த வாரம் நிர்ணய விலையில் பொருள்கள்

## மீண்டும் அரசு அறிவிப்பு

அடுத்த வாரம் முதல் அத்தியாவசிய பொருள்கள் பல நிர்ணய விலையில் விற்கப்படும் என்று வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார். வர்த்தக அமைச்சில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறினார். இறக்குமதி செய்யப்பட்ட வெங்காயம் ரூ.75, இறக்குமதி செய்யப்பட்ட உருளைக்கிழங்கு ரூ.130, 1 கிலோ பச்சை அரிசி ரூ.93, 1 கிலோ நாட்டரிசி ரூ.96 ஆகிய விலைகளில் விற்பனை செய்யப்படும் என்று தெரிவித்தார்.

தேங்காய் எண்ணெய்க்குப் பதிலாக சோயா எண்ணெயை அறிமுகப்படுத்த அமைச்சு எதிர்பார்க்கிறது. இது தேங்காய் எண்ணெயின் இறக்குமதி செலவைக் குறைக்கும். சோயா உற்பத்தியாளர்கள் தங்கள் தயாரிப்புகளை இலாபகரமாகவும் சலுகை விலையிலும் விற்க அமைச்சு ஓர் உடன்படிக்கைக்கு வரவுள்ளது. இதேவேளை பிரிட்டன், இலங்கை கூட்டுத்தாபன (பி.சி.சி.) ஒத்துழைப்புடன் சலுகை வீதத்தில் சவர்க்காரத்தை இலங்கைக்கு வழங்கவும் அமைச்சு எதிர்பார்த்துள்ளது, என்றார். (ஒ,இ)




# முகக்கவசம் அணியாத 2,344 பேருக்கு பி.சி.ஆர்.

கொழும்பு, ஜன.13

மேல் மாகாணத்தில் கடந்த வாரத்தில் மாத்திரம் முகக்கவசம் அணியாத 2 ஆயிரத்து 334 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அதன்படி, நேற்றுமுன்தினம் மாத்திரம் 121 பேர் குறித்த பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இந்தப் பரிசோதனை முடிவுகளுக்கு அமைவாக 46 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதி தொடக்கம் இதுவரையான காலப்பகுதியில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 2 ஆயிரத்து 438 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (ஐ-இ)

# யாழ்ப்பாண கலாசார நிலையத்தை கோத்தா அரசிடம் ஒப்படைக்கோம்

### மேயர் மணிவண்ணன் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஜனவரி 13**
**யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டு வரும் கலாசார மத்திய நிலையத்தை, கோத்தாபய அரசிடம் ஒப்படைக்கும்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. எனினும், யாழ் மாநகரசபை அதை நிராகரித்துள்ளது.**

கொழும்பில் நேற்று நடந்த உயர் மட்ட சந்திப்பில் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது.
யாழ்ப்பாண மாநகர மேயர் வி. மணிவண்ணன், மாநகர ஆணையாளர் த.ஜெயசீலன், வடக்கு ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், வடக்கு பிரதம செயலாளர் பத்திநாதன் மற்றும் பிரதமரின் பிரதம செயலாளர் காமினி செனரத், இலங்கைக்கான இந்தய துணைத் தூதர் ஆகியோர் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர்.
இதன்போது, யாழ்ப்பாணத்தில் இந்திய அரசின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்டு வரும் கலாசார மத்திய நிலையத்தை பராமரிக்கும் வலு மாநகரசபைக்கு இருக்காது. எனவே அதனை கொழும்பு அரசிடம் ஒப்படைக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டது. எனினும், யாழ். மாநகரசபை மேயர் வி.மணிவண்ணன் அதை நிராகரித்துள்ளார். கலாசார நிலையத்தை பராமரிக்கும் வலு, யாழ். மாநகரசபைக்கு உள்ளது என்று அவர் தெரிவித்தார். (ஒ.26)

# நாடாளுமன்றத்தை மிரட்டும் கொரோனா

### சுயதனிமைப்படுத்தலில் எம்.பிக்கள் 31 பேர்

கொழும்பு, ஜன.13
நாட்டில் 31 நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.
நேற்று திங்கட்கிழமை, கொவிட்19 தொற்று உறுதி செய்யப்பட்ட நீர்வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவுடன் நெருங்கிய தொடர்பைப் பேணியவர்கள் எனக் கண்டறியப்பட்ட 10 பேருக்கு பி.சி.ஆர்.பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, அவர்களை சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்திக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.
இதே வேளை அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவுடன் தொடர்புடைய 15 நாடாளுமன்ற பணிக்குழாமினரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அத்துடன் இராஜாங்க அமைச்சர் விமலவீர திஸாநாயக்கவுக்கும் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது
இதேவேளை இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் மற்றும் பிரதமரின் அரசியல் விவகாரங்களுக்கான இணைப்பு செயலாளர் குமாசிறி ஹெட்டிகே ஆகியோருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் இவர்களுடன் தொடர்பில் இருந்த 31 நாடாளுமன்ற உறுப்பினர்களை சுய தனிமைப்படுத்திக்கொள்ளுமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ந-இ)

# நினைவுத்தூபி விவகாரத்தில் அரசியல் தலையீடு இல்லை

கொழும்பு, ஜன. 13
யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளி வாய்க்கால் நினைவுத்தூபி இடித்தழிக்கப்பட்டதற்கும் அரசுக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது என்று அமைச்சரவை இணைப்பேச்சாளரும், அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.
அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.
இதன்போது முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி இடிக்கப்பட்ட விவகாரம் தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.
'யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் இருந்த நினைவுத்தூபியை அகற்றுவதற்கான முடிவை உபவேந்தர் உள்ளிட்ட பல்கலைக்கழகத்தின் அதிகாரிகளே எடுத்திருந்தனர். தற்போது அதனை மீண்டும் நிர்மாணிப்பதற்கான முடிவையும் அவர்களே எடுத்துள்ளனர். குறித்த முடிவுடன் அரசுக்கு எவ்வித தொடர்பும் இல்லை. அரசு அழுத்தங்களை பிரயோகிக்கவும் இல்லை' என்றார். (ஒ.5)

# எதிர்வரும் பெப்ரவரியில் நாட்டுக்குத் தடுப்பூசிகள்

### இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.13
எதிர்வரும் பெப்ரவரி மாதம் ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசியை இந்தியா மூலமாகவும், பைசர் பயோஎன்டெக் தடுப்பூசியை உலக சுகாதார அமைப்பின் மூலமாகவும் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என இராஜாங்க அமைச்சர் சுதர்சினி பெர்ணாண்டோ புள்ளே நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.
அதன்பிரகாரம் ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வது குறித்து இந்தியாவுடன் தொடர்ந்தும் பேச்சுவார்த்தை இடம்பெற்று வருகின்றது எனவும் அவர் தெரிவித்தார்.
அண்மையில் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கருடனான சந்திப்பின்போது, கொரோனாத் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள இந்தியாவின் உதவியை இலங்கை அரசாங்கம் கோரியிருந்தது. கோவக்ஸ் திட்டத்தின் கீழ் இலங்கையின் 20 சதவீத மக்களை உள்ளடக்கும் வகையில் தடுப்பூசி வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்படும் என உலக சுகாதார அமைப்பு உறுதியளித்திருந்தது.
இந்த நிலையில் உலக சுகாதார அமைப்பு பைசர்பயோஎன்டெக் தடுப்பூசியை வழங்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. கொரோனாத் தடுப்பூசியை பெறுபவர்களின் முன்னுரிமைப் பட்டியலை சுகாதார அமைச்சு ஏற்கனவே வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற-இ)

## தென்மராட்சியில்
# அடை மழையால் 40 பேர் பாதிப்பு

சாவகச்சேரி,ஜன. 13
தென்மராட்சி பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் பெய்த அடைமழை காரணமாக 17 வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்ததால் 40 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.
கோயிற்குடியிருப்பு பிரிவில் 6 குடும்பங் களைச் சேர்ந்த 15 பேரும் , குடமியன் பிரிவில் 2 குடும்பங்களைச் சேர்ந்த 3 பேரும், மிருசுவில் வடக்குப் பிரிவில் 7 குடும்பங்க ளைச் சேர்ந்த 15 பேரும், மறவன்புலவு பிரிவில் 2 குடும்பங்களைச் சேர்ந்த 7 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. பிரதேசத்தின் பல கிராம அலுவலர் பிரிவுகளில் வெள்ளம் அதிகரித்துள்ள நிலையில் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

# முல்லையில் தொடர் மழை; பயிர்ச்செய்கைக்கு ஆபத்து

### வான் பாயும் 11 குளங்கள்; மக்களுக்கு வெள்ள எச்சரிக்கை

முல்லைத்தீவு, ஜன.13
முல்லைத்தீவு மாவட்டத்தில் இரண்டாவது நாளாகவும் தொடர்ச்சியாக மழை பெய்துகொண்டிருக்கும் நிலையில், மாவட்டத்தில் கடந்த 24 மணி நேரத்தில் வெலிஓயா பிரதேசத்தில் 150 மில்லி மீற்றர் மழையும், தண்ணீர்முறிப்பு பகுதியில் 124 மில்லி மீற்றர் மழையும், ஜயன்கன்குளம் பிரதேசத்தில் 125 மில்லி மீற்றர் மழையும், ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் 93 மில்லி மீற்றர் மழையும் பதிவாகியுள்ளது என மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.
இந்நிலையில், தண்ணீர்முறிப்பு குளத்தின் நீர்வரத்து அதிகரித்துவரும் நிலையில் குளத்தின் வான்கதவுகள் மூன்றும் திறந்துவிடப்பட்டுள்ளன. தொடர்ச்சியாக பெய்துவரும் மழை காரணமாக தாழ்நிலப் பிரதேசங்களில் வெள்ளம் நிரம்பியுள்ளதுடன் மாவட்டத்தின் வவுனிக்குள நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழுள்ள 11 குளங்களும் நிரம்பி வான்பாய்கின்றன. மாவட்டத்தில், இதுவரை பெரியளவில் பாதிப்புக்கள் எவையும் பதிவாகாத நிலையில் தாழ்நிலப் பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு வெள்ள எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன் பாதுகாப்பாக இருக்குமாறு நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவித்துள்ளது. இதேவேளை, தொடர் மழை காரணமாக விளைந்து வரும் நெற்பயிர்கள் அழிவைச் சந்திக்கும் அபாய நிலையும் ஏற்பட்டுள்ளது, என விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். (ந-19)



# வெளிநாடுகளில் இருந்து மேலும் 434 பேர் வருகை

கொழும்பு, ஜன.13
வெளிநாடுகளில் இருந்து மேலும் 434 பேர் நேற்று அதிகாலை நாட்டை வந்தடைந்துள்ளனர்.
கட்டாரில் இருந்து 311 பேரும் ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்து 46 பேரும் மாலைதீவில் இருந்து 76 பேரும் சீனாவில் இருந்து ஒருவரும் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் எனக் கூறப்படுகின்றது. (ச-இ)



இந்த சூரிய உதயத்தின் ஆசீர்வாதமானது,
இன்று உங்கள் வாழ்வில் பலத்தையும்
சுபீட்சத்தையும் கொண்டு வரட்டும்!

**இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்!**

UNION ASSURANCE PLC (PQ12)

யூனியன் அஷ்யூரன்ஸ்
ஜோன் கீல்ஸ் நிறுவனமாகும்

உங்கள் வாழ்க்கைக்கு எங்களது பலம்.

# மாணவ சமுதாயத்தின் பலம் மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது!

## நினைவுத்தூபி இடித்தழிப்பு தொடர்பில் இரா. சாணக்கியன் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜன.13

**மாணவ சமுதாயத்தின் பலம் மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது. எமது ஒற்றுமையே எமது பலம். எமது உரிமை எமது உணர்வு. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.**



யாழ்.பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவிடம் இடித்தழிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் வடக்கு கிழக்கில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை அனுஷ்டிக்கப்பட்ட, ஹர்த்தால் வெற்றியடைந்துள்ளமை தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இரா.சாணக்கியன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும், குறுகிய கால அவகாசத்தில் விடுக்கப்பட்ட பூரண ஹர்த்தாலுக்கான அழைப்புக்கு மாபெரும் ஆதரவு வழங்கியமைக்கு அனைத்து தரப்பினருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். கொரோனாத் தொற்றுப் பரம்பல் அச்சம் காரணமாக நான் சுயதனிமைப்படுதலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளேன். இதன் காரணமாக அன்றைய தினம் யாழ். பல்கலைக்கழகத்துக்கு என்னால் வர முடியாததை எண்ணி மிகவும் மனம் வருந்துகின்றேன்.

அத்துடன், தாக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள மயிலத்தமடு பண்ணையாளர்களை நேரில் சென்று பார்க்க முடியாமல் போய் விட்டதையும் எண்ணி வருந்துகிறேன். உங்கள் பிரச்சினையை நான் ஒருபோதும் கைவிட்டுபோவதில்லை. நீதி கிடைக்கும்வரை தொடர்வேன்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

# விவசாயம் செய்வதற்கு நிலங்களை வழங்குங்கள்

### வெள்ளாங்குளம், சேவாலங்கா குடியிருப்பு மக்கள் கோரிக்கை

மன்னார், ஜன.13

வாழ்வாதாரத்தை ஈடுசெய்ய மேலதிகமாக வயல் நிலங்களை வழங்குங்கள் என்று மன்னார், அடம்பன் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வெள்ளாங்குளம் கிராமத்தின் சேவாலங்கா குடியிருப்பு மக்கள் கோரியுள்ளனர்

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது; சேவாலங்கா குடியிருப்பில் 50 குடும்பங்கள் வசித்து வரும் நிலையில் அனைவரும் விவசாயத்தையே வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளனர்.

குடும்பத்துக்கு ஒரு ஏக்கர் என்ற அடிப்படையில் காணி வழங்கப்பட்டு, வீட்டுத்திட்டமும் வழங்கப்பட்டுள்ளது. தற்போது தொழில் வாய்ப்புக்களுக்கு சாதகமற்ற நிலை நிலவுவதால் விவசாயம் ஒன்றே எமது பிரதான தொழிலாக உள்ளது. பயிர்ச் செய்கைக்கு மேலதிகமாக ஒரு ஏக்கர் வயல் நிலமோ அல்லது மேட்டுப் பயிர்ச்செய்கை நிலமோ வழங்கினால் அதில் விவசாயத்தை மேற்கொண்டு எமது வாழ்வாதாரத்தை போக்கி கொள்வோம் -என்றனர். (ஐ-ரி1)



மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பருப்புக்கடந்தான் கிராமத்தைச் சேர்ந்த 25 பாடசாலை மாணவர்களுக்கு நேற்றுமுன்தினம் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. சமூக சேவையாளர் பி.வி. டக்ஸனால் இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (ஐ-56)

## மஹிந்தவின் ஊடக பணிப்பாளர் கைது

கொழும்பு, ஜன. 13

வாகன விபத்தொன்று தொடர்பில் மஹிந்த ராஜபக்சவின் ஊடகப் பணிப்பாளர் விஜயானந்த ஹேரத் கைது செய்யப்பட்டார்.

நவகமுவ பிரதேசத்தில் வைத்து தன்னுடைய வாகனத்தால் இரண்டு நபர்களை முட்டி மோதிக் காயப்படுத்தினார் என்ற குற்றச்சாட்டிலேயே அவர் கைது செய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ரி5)

# அரசாங்கம் அனைத்து விடயங்களிலும் 'பெயில்'

### ஐ.ம.சக்தி சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜன.13

நாடாளுமன்றத்துக்குள் கொரோனாத் தொற்றின் நிலைமை மோசமடைந்து வருகின்றது. இந்த நிலைமையைப் பார்க்கும்போது, 224 பேருக்கும் கொரோனா தொற்றிக்கொள்ளும் அபாயம் உள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துவெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, அரசாங்கம், கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்த முடியாமல் திணறுகின்றது.

அரசாங்கத்தால் நாட்டு மக்களையும் கொரோனா வைரஸிடமிருந்து காப்பாற்ற முடியவில்லை நாடாளுமன்ற உறுப்பினர்களையும் காப்பாற்ற முடியவில்லை. நாடாளுமன்றத்துக்குள்ளும் தோல்வி, நாடாளுமன்றத்துக்கு வெளியிலும் தோல்வி - என்றார்.

ஒவ்வொரு முக்கியமான விடயங்களிலும் சித்தியடையத் தவறிய அரசாங்கமே, இந்த அரசாங்கமாகும் என்பதைச் சொல்லிக் கொள்வதில் அச்சமடையவில்லை. அரசாங்கம் பொருளாதார ரீதியிலும், நிர்வாக ரீதியிலும், கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்தும் செயற்பாட்டிலும் தோல்வியையே சந்தித்து வருகின்றது என்றார் தெரிவித்தார். (ம-இ)

## வவு. விவசாயிகளுக்கு உர விநியோகம்

வவுனியா, ஜன.13

வவுனியா மாவட்டத்தில் 35 ஆயிரம் ஹெக்டேயர் நிலப்பரப்பில், இம்முறை பெரும்போக நெற்பயிர்ச் செய்கையில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

பருவ மழை மூலம் வவுனியாவில் குளங்கள் நிரம்பியுள்ளன. இந்நிலையில் மாவட்டத்தில் விவசாயிகளுக்குத் தேவையான உரம், வவுனியாவில் உள்ள 12 விவசாய சேவைகள் மத்திய நிலையங்கள் ஊடாக தாமதம் இன்றி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது என விவசாய சேவைகள் உதவி ஆணையாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (ந)



## நவீனமயமாகிறது குருநாகல் வைத்தியசாலை

குருநாகல், ஜன.13

குருநாகல் மாவட்ட பொது வைத்தியசாலை, அதிநவீன வைத்தியசாலையாக புதிதாக நிர்மாணித்து வழங்கப்படும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

மாகாண பொது வைத்தியசாலை மற்றும் மாவட்டத்தின் பிற வைத்தியசாலைகள் தொடர்பான பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு குருநாகல் மாவட்டச் செயலாளர் அலுவலக கேட்போர் கூடத்தில் கடந்த முதலாம் திகதி இடம்பெற்ற சந்திப்பின்போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (ந)

# உள்ளூராட்சித் தேர்தல் முறைமை: மீள்பரிசீலனைக்கு குழு நியமனம்

கொழும்பு, ஜன.13

உள்ளூராட்சித் தேர்தல் முறைமை தொடர்பில் மீள்பரிசீலனை செய்வதற்காக மூவர் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது என அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் தெரிவித்துள்ளார்.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் முன்னாள் செயலாளரும், காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் செயலாளருமான ஆர்.ஏ.ஏ.கே.ரணவக்கவின் தலைமையில் இக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. குறித்த குழுவில் ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் சுதந்த லியனகே, காணி அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜயலத் ரவி திஸாநாயக்க ஆகியோர் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். உள்ளூராட்சி மன்றத்தேர்தல் கட்டளைச் சட்டத்தின் மூலம் அறிமுகம் செய்யப்பட்ட விகிதாசார பிரதிநிதித்துவ கலப்பு முறையின் காரணமாக உள்ளூராட்சி நிறுவனங்களின் ஸ்திரத்தன்மை பாதிக்கப்பட்டது என பலதரப்புக்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைத்திருந்த நிலையில், அவற்றை ஆராய்ந்து, மூன்று மாதங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு குழுவுக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. (ந-இ)

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பெயர் எதுவாகிலும்...!

பல்கலைக்கழகத் தூபி விவகாரம் வேறொரு கோணத்தில் தொடர்ந்தும் எரிவதற்கான சமிக்ஞைகளே அதிகம். இடிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி மீளவும் அமைக்கப்படுவதற்கான அடிக்கல் நேற்றுமுன் தினம் நடப்பட்டது. அத்தோடு, மாணவர்கள் மேற்கொண்ட உணவுத் தவிர்ப்புப் போராட்டம் முடிவுக்கும் வந்திருந்தது. ஆனால் அதன் பின்னர் புதிய பூதமொன்று கிளம்பியிருக்கிறது.

‘முள்ளிவாய்க்கால் தூபியை யாழ். பல்கலைக்கழகத்தில் அமைக்க, மானியங்கள் ஆணைக்குழு அனுமதிக்காது. அதற்கான சுற்றுநிருபமும் அனுப்பப்பட்டிருக்கிறது. இப்போதைக்கு தூபிக்கு அனுமதி பெறுவதுபோல காலத்தை இழுத்தடித்துவிட்டு, அங்கே சமாதானத் தூபியே அமைக்கப்படும்’ என்று தமிழ் சிவில் சமூகம் எழுப்பிய சந்தேகம் புதிய குழப்பத்தை உண்டு பண்ணியிருந்தது.


இந்த நிலையில் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் கூறிய கருத்தும் அங்கே சமாதானத் தூபியே அமைக்கப்படவுள்ளதை உறுதி செய்துள்ளது. ஆயினும் ‘முன்னர் இருந்த தூபியின் வடிவத்திலேயே மீளவும் தூபி நிறுவப்படும். ஆனால் பெயர் மட்டும் சமாதானத்தூபி என்று வைக்கப்படும்’ என ஆங்கில ஊடகமொன்றுக்கு அவர் வழங்கிய பேட்டியில் சொல்லியிருக்கிறார். ஆனால் தூபியின் பெயரை மாற்ற மாணவர் தரப்பு இணங்குமா என்பது கேள்விக்குறியே.

இருப்பினும் முன்னர் இருந்த அதே தோற்றத்தோடு, எறிகணைகள் வீழும் நிலத்தில் எழும் அவலக் கரங்களை குறியீடாகக்கொண்டு அமைக்கப்பட்டு அதற்கு என்ன பெயர் வைத்தாலும், எல்லோர் மனதிலும் அது முள்ளிவாய்க்கால் தூபி என்றுதான் நினைவில் நிற்கும். போர் முடிவடைந்து பதினொரு வருடங்கள் தாண்டியும், நல்லூரில் உள்ள பூங்காவை கிட்டுப் பூங்கா என்று சொன்னால் தான் எவருக்கும் அடையாளம் தெரிகிறது. அப்படி நிறைய இடங்கள் உள்ளன. முதலில் என்ன பெயர் வைக்கிறோமோ அதுதான் கடைசிவரை நிலைக்கிறது. சிலவேளைகளில் அந்தப் பெயருக்குரிய விடயம் அழிந்திருந்தாலும் கூட, பழைய பெயரும், அதன் நினைவுகளும் இன்னும் அழியாமல் இருக்கின்றன. கிளிநொச்சியில் இப்போதும் பலர் பஸ்ஸில் பயணிக்கும்போது ‘புலிகளின் குரலடியில இறக்கம்’ என்று சொல்வார்கள். இப்போது புலிகளும் இல்லை, புலிகளின் குரலும் இல்லை, அந்த வானொலி நிலையம் அமைந்திருந்த அடையாளமும் இல்லை. ஆனால் மக்களின் மனதில் இன்னமும் அது புலிகளின் குரலடிதான்.

பாகுபலி படத்தில், நாயகனான பாகுபலி இறந்து பல வருடங்களுக்குப் பின்னர் அவனை விடவும் தன்னையே மக்கள் மனதில் நினைக்கவேண்டும் என வில்லனான பல்வாள்தேவன் திட்டமிடுகிறான். தனக்கு ஒரு பிரமாண்டமான சிலை அமைக்கிறான். ஆனால் அதை வைக்கும்போது மக்களுக்கு பாகுபலியின் நினைவு வந்து எல்லோரும் ‘பாகுபலி, பாகுபலி’ என முழக்கமிடுவர். உண்மையான பல்வாள்தேவனின் சிலையை விடவும், அருவமான பாகுபலியின் சிலையே பேருருக் கொண்டு நிற்கும்.

அதைப்போல பல்கலைக்கழகத்தில், மீளெழப் போகின்ற தூபிக்கு சமாதானத்தூபி என்றோ, பொது நினைவேந்தல் தூபி என்றோ, போரால் கொல்லப்பட்ட சகலருக்குமான நினைவிடம் என்றோ அல்லது போர்வெற்றித் தூபி என்றோகூட பெயரை வைத்துக் கொண்டாலும், அது என்றென்றைக்கும் எல்லோர் மனதிலும் முள்ளிவாய்க்கால் தூபியாகவே நினைவில் நிற்கும். ஆனாலும் எம் இனத்தின் மீது நிகழ்த்தப்பட்ட கொடூரத்தை அடுத்துவரும் தலைமுறைகளும் அறிந்து கொள்ள முள்ளிவாய்க்கால் தூபி என்பதைத் தவிர வேறு எந்தப் பெயரும் அதற்குப் பொருத்தமாய் இராது.

## இன்றைய கேலிச்சித்திரம்




நன்றி - அவந்த ஆட்டிகல

# ரூ.1000 சம்பள விடயத்தில் அரசு கைவிரிப்பு!

கொழும்பு, ஜன. 13
பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வு தொடர்பில் அரசு கொள்கை ரீதியில் தீர்மானம் எடுத்திருந்தாலும், ஊதிய உயர்வை பெருந்தோட்ட நிறுவனங்களே வழங்கவேண்டும் என்று அமைச்சரவை இணைப் பேச்சாளரும், அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டின்போது, பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான ஆயிரம் ரூபா சம்பள உயர்வு விவகாரம் பற்றி எழுப்பப்பட்ட கேள்விக் குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

‘பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச நாளாந்த வேதனமாக ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை அரசு எடுத்திருந்தாலும், சம்பள உயர்வு குறித்து தோட்ட நிர்வாகங்களே இறுதி முடிவை எடுக்க வேண்டும். இது விடயத்தில் அரசால் கொள்கை ரீதியிலான முடிவையே எடுக்கமுடியும். சம்பள உயர்வு சம்பந்தமாக தொழில் அமைச்சர், தொழிற் சங்கங்கள், முதலாளிமார் சம்மேளனத்தினர் என்று முத்தரப்பு சந்திப்பு நடைபெற்று வருகின்றது. இதன்படி முடிவு என்னவென்பதை தொழில் அமைச்சர் விரைவில் அறிவிப்பார்’ என்றார். (ஒ,44)



# ஜனாஸா எரிப்பு விவகாரம் ஜெனிவாவில் எதிரொலிக்கும்

கொழும்பு, ஜன. 13
கொரோனாத் தொற்றால் உயிரிழக்கின்ற முஸ்லிம்களின் ஜனாஸாக்கள், அவர்களின் மத நம்பிக்கைக்கு மாறாக எரியூட்டப்படும் நடைமுறை தொடர்பில், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 46ஆவது அமர்வில், அதனோடு இணைந்ததாக நடக்கும் பக்க அமர்வுகளில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஜெனிவாவைத் தளமாகக்கொண்ட சில முஸ்லிம் அமைப்புக்கள் மற்றும் சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் இதற்கான நடவடிக்கைகளை முன்னெத்துள்ளனர். (ஒ,இ)

# ரஞ்சனின் எம்.பி. பதவி பறிபோகும்?

கொழும்பு, ஜன. 13
நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் குற்றவாளியாக இனம் காணப்பட்டு 4 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவின், நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வெறிதாக்கப்படும் என்று தெரிய வருகின்றது.

இரண்டு ஆண்டுகளுக்கு மேல் சிறைத் தண்டனை விதிக்கப்படும் ஒருவரது குடியுரிமை இழக்கப்படும் என்பதற்கு அமைவாக ரஞ்சன் ராமநாயக்கவின் பதவி வெறிதாகும் என்று குறிப்பிடப்படுகின்றது. அவரது உறுப்பினர் பதவி வெறிதாகினால், அவரது இடத்துக்கு முன்னாள் இராஜாங்க அமைச்சர் அஜித் மன்னப்பெரும நியமனமாவார்.

இதேவேளை ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பிரேம்லால் ஜெயசேகரவுக்கு, தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருந்த நிலையில் அவர் நாடாளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ,இ)

# தைப்பொங்கலன்று மிகவும் அவதானம்

## தொற்று நோயியல் பிரிவு எச்சரிக்கை

கொழும்பு,ஜன.13

தைப்பொங்கல் பண்டிகையை சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைவாக மக்கள் கொண்டாட வேண்டியது அவசியம். அவற்றை மீறினால் பாரதூரமான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு எச்சரித்துள்ளது.

முடிந்தளவு நடமாட்டங்களைத் தவிர்த்து, தனிநபர் இடைவெளியைப் பேணுங்கள் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவுக்குப் பொறுப்பான விசேட மருத்துவ நிபுணர் சுதத் சமரவீர கேட்டுள்ளார்.

விடுமுறையான போதிலும் அவசியமின்றி வெளியே செல்லக் கூடாது. அத்தியாவசிய காரணங்களுக்காக வெளியில் செல்கையில் சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். குறிப்பாக மேல் மாகாணத்திலிருந்து வெளி மாவட்டங்களுக்குச் செல்பவர்கள் வீடுகளில் தங்கியிருப்பது அவசியம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (கு-இ)

# தனியாருக்கு சலுகை நீடிப்பு

கொழும்பு, ஜன.13

கொவிட் - 19 தொற்று நிலையில் தனியார் துறையினருக்கு வழங்க இணக்கம் காணப்பட்ட சலுகைகளுக்கான, காலப்பகுதியை நீடிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

தொழில் அமைச்சரால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைக்கு அமைய இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31ஆம் திகதியுடன் முடிவடையவிருந்த சலுகைக் காலம் எதிர்வரும் மார்ச் மாதம் இறுதிவரை நீடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஊழியர்களைத் தொழிலிருந்து நீக்காமல் இருத்தல், அனைத்து ஊழியர்களும் தொழிலில் ஈடுபடுவதற்கு சமமான வாய்ப்பு வழங்கல், ஊழியர்கள் வீட்டில் தங்கியிருக்க நேரிட்டால் இறுதியாகச் செலுத்தப்பட்ட மாதாந்த மொத்தச் சம்பளத்தின் அடிப்படைச் சம்பளத்தின் 50 வீதம் அல்லது 14 ஆயிரத்து 500 ரூபா இரண்டிலும் கூடிய தொகை எதுவோ, அத் தொகையைச் செலுத்தல் உள்ளிட்ட சலுகைகளுக்கு உடன்பாடு எட்டப்பட்டிருந்தது.

அதனடிப்படையில் அச் சலுகைகளுக்கான கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது. (கு-இ)

# ஹிஸ்புல்லாவுக்கு மேலும் தடுப்புக் காவல்



## பாதுகாப்பு அமைச்சு அனுமதி

கொழும்பு, ஜன.13

சுமார் ஒன்பது மாதங்களாக சி.ஐ.டி. யினரின் தடுப்பில் உள்ள சிரேஷ்ட சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ்வை மேலும் மூன்று மாதங்களுக்கு தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்க பாதுகாப்பு அமைச்சு அனுமதியளித்துள்ளது.

இது தொடர்பில் குற்றப் புலனயவுத் திணைக்களம் நேற்றுமுன்தினம் கோட்டை நீதிவான் பிரியந்த லியனகேவுக்கு அறிவித்துள்ளது.

ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் விவகாரத்தில் சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமைய மேலதிக விசாரணைகள் இடம்பெறுகின்றன என்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கடந்த ஏப்ரல் 14 ஆம் திகதி சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் சி.ஐ.டி. யினரால் கைதுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ப)

# வவுனியா மருத்துவமனையில் 3 பேருக்கு கொரோனாத் தொற்று

வவுனியா, ஜன. 13

வவுனியா மருத்துவமனைப் பணியாளர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் மூவருக்குத் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவர்களுக்கு பி.சி.ஆர். சோதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பட்டாணிச்சூரைச் சேர்ந்த சிற்றூழியர் ஒருவருக்கும், நிர்வாகப் பிரிவைச் சேர்ந்த முகாமைத்துவ உதவியாளர் ஒருவருக்கும் நேற்றைய தினம் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. அவர்களுக்கு நேற்றுக் காலை பி.சி.ஆர். சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதேவேளை நேற்றுக் காலை நிர்வாகப் பிரிவைச் சேர்ந்த மற்றொரு பணியாளருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வவுனியா நகரில் தொற்றாளர்கள் அதிகரித்து வரும் நிலையில், மருத்துவமனைப் பணியாளர்களும் தொற்றுக்குள்ளாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ-5)

# குடும்பச் சட்டத்தை மாற்றத் தீர்மானம்

கொழும்பு,ஜன.13

விவாகரத்து, திருமண முடிவுறுத்தல், விவாகரத்துக் கொடுப்பனவு, பிள்ளைகள் பொறுப்பு மற்றும் சொத்துப் பிரிப்பு ஆகியவற்றை உள்ளடக்கும் வகையில் குடும்பச் சட்டத்தை மாற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

திருமணம், விவாகரத்து மற்றும் அதனுடன் தொடர்புடைய நடைமுறைகள் 1907 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருமண பதிவு கட்டளைச் சட்டத்திலும், குடியியல் வழக்கு சட்டக்கோவையிலும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் தற்போதைய நிலமைக்கு ஏற்ப, கட்டளைச் சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

அதற்கமைவாக குடும்பச் சட்டம் தொடர்பாக பிற நாடுகளில் நிலவும் சட்ட நிலைமைகளைப் பற்றி ஆய்வு செய்ய, நீதி அமைச்சர் அலி சப்ரி முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நிபுணர் குழுவின் உதவியுடன் பிற நாடுகளில் நிலவும் சட்ட நிலைமைகளைப் பற்றி ஆய்வு செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அரச தரப்பால் அறிவிக்கப்பட்டுள்ளது. (கு-இ)

# வியாபாரம் பாதித்தோருக்கு வங்கியால் காசோலைகள்




கொழும்பு, ஜன. 13

ஹற்றன் நஷனல் வங்கியின் நெல்லியடி கிளையின் வாடிக்கையாளர்களில், கொவிட் 19 தொற்றால் வியாபார நடவடிக்கைகளில் பாதிக்கப்பட்ட தொழில் முயற்சியாளர்களுக்கு கடந்த வெள்ளிக்கிழமை காசோலைகள் வழங்கப்பட்டன.

ஹற்றன் நஷனல் வங்கியின் நீண்டகால வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் இந்த நிதியுதவித் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு கடந்த மாதம் 22ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் உள்ள வடபிராந்தியக் கிளையில் இடம்பெற்றிருந்தது.

நாடுமுழுவதும் முதற்கட்டமாக 200 பேருக்கு இந்த நிதி உதவி வழங்கப்படுகிறது. வடபிராந்தியத்தில் 28 தொழில் முயற்சியாளர்கள் இந்த நிதி உதவித் திட்டத்துக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

நெல்லியடி வாடிக்கையாளர்களுக்கு நெல்லியடி வங்கி முகாமையாளர் எம்.ஜே லோறான்ஸ் தலைமையில் காசோலை வழங்கும் வங்கியின் வடபிராந்திய வியாபார நடவடிக்கைக்கான மூத்த முகாமையாளர் க.வாதுளன் பங்கேற்று பயனாளிகளுக்கு காசோலைகளை வழங்கினார். (ப)

# கொரோனாவை எதிர்த்து தோற்றுப் போனது அரசு

## சட்டத்தரணி லால் விஜயநாயக்க சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜன.13

கொரோனாவுக்கு எதிரான போராட்டத்தில் இலங்கை தோற்கடிக்கப்பட்டுள்ளது என ஜனநாயகத்துக்கான சட்டத்தரணிகள் அமைப்பின் உறுப்பினர் சட்டத்தரணி லால் விஜயநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

கொரோனா வைரஸ் மருந்துகள் தொடர்பான அடிப்படை நடவடிக்கைகள்கூட இன்னமும் தயாராகவில்லை. இலங்கையை விட சிறிய நாடுகள்கூட மருந்துகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளன. மருந்துகளைக் கொண்டுவருவது. அவற்றை சேமிப்பது மற்றும் அவற்றை விநியோகிப்பது போன்ற விடயங்களுக்கு திட்டமிடவேண்டும். மருந்தை வழங்குவதற்கான பயிற்சிகள் வழங்கப்படவேண்டும்.

கொவிட் கட்டுப்படுத்தப்படவில்லை, நாட்டில் தொடர்ந்தும் பரவுகின்றது என்றார். (ப)

# சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் யார்?

## பெப்ரவரி 24இல் தேர்தல்


கொழும்பு, ஜன.13

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் பதவிக்கான தேர்தல் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

குறித்த தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் நேற்றுமுன்தினம் ஏற்றுக்கொள்ளப்பட்டன. அதன்படி இம்முறை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் பதவிக்கு ஜனாதிபதி சட்டத்தரணிகளான சாலிய பீரிஸ் மற்றும் குவேர டி சொய்ஸா ஆகியோர் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர். (ப)

# மக்களுக்கு தகுந்த தடுப்பூசி; ஆராய்ச்சிகள் துரிதகதியில்!

## விரைவில் நிறைவடையும் என்கிறார் ஜனாதிபதி செயலணியின் தலைவர்




கொழும்பு, ஜன.13

**நாட்டு மக்களுக்குப் பொருத்தமான கொரோனாத் தடுப்பூசி தொடர்பில் ஆராய்ச்சிகள் இடம்பெற்று வருகின்றன என கொரோனாத் தடுப்பூசி திட்டம் மற்றும் தேசிய அபிவிருத்தி தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.**


இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தடுப்பூசிகளை உற்பத்தி செய்யும் நாடுகளின் ஆராய்ச்சி அறிக்கைகள் மற்றும் தரவுகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி இந்த ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அவசர நிலைமையின் கீழ் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படுவதால், பரிசோதனைகளைத் துரிதப்படுத்தி விரைவில் நிறைவுசெய்வதற்கு எதிர்பார்க்கின்றோம். இந்தப் பரிசோதனைகளுக்கு அமைவாக நாட்டில் தற்போது கிடைக்கும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தடுப்பூசிகளுக்கு தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகார சபையின் அனுமதி பெறப்படும்.

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகார சபையின் அனுமதியின்றி, எந்தவொரு கொரோனாத் தடுப்பூசியும் நாட்டுக்கு கொண்டுவரப்படமாட்டாது என்றார்.

இதேவேளை, கொரோனாத் தடுப்பூசி தொடர்பில் ஆய்வுகளை மேற்கொள்ளுமாறு அரச ஔடதங்கள் கூட்டுத்தாபனத்திடம் கோரப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை முழுமை பெற்றதன் பின்னர் பரிசோதனையை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம் என தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகார சபையின் பிரதம நிறைவேற்றதிகாரி வைத்தியர் கமல் ஜயசிங்க தெரிவித்துள்ளார். (ந-இ)



## ஜனாதிபதியை சந்தித்தார் பங்களாதேஷ் தூதுவர்!!

கொழும்பு, ஜன.13

இலங்கைக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பங்களாதேஷ் மக்கள் குடியரசு உயர் ஸ்தானிகர் தாரிக் முகம்மத் ஆரிபுல் இஸ்லாம், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடம் தனது நற்சான்றுப் பத்திரத்தை நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மாளிகையில் வைத்துக் கையளித்தார். இச் சந்திப்பில் இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலைமை பற்றி விளக்கமளித்த ஜனாதிபதி, பங்களாதேஷ் உள்ளிட்ட பிராந்திய நாடுகளுடன் அடையாளம் காணப்பட்ட துறைகளில் இருதரப்பு உறவை மேம்படுத்துவது தனது எதிர்பார்ப்பாகும் என்றும் தெரிவித்தார். (ற-இ)

### ஈஸ்டர் தாக்குதல்:

## குற்றவாளிகள் எவரும் தண்டிக்கப்படவில்லை!

கொழும்பு, ஜன.13

இலங்கையில் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுக்குப் பொறுப்பான எவரும் இதுவரை நீதிமன்றின் மூலம் தண்டிக்கப்படவில்லை என ஐக்கிய மக்கள் சக்தி குற்றம்சாட்டியுள்ளது.

நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் உரையாற்றிய அக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன, அமெரிக்காவில் மூன்று பேருக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டினார். இந்தத் தாக்குதல் இடம்பெற்ற போது நல்லாட்சி அரசாங்கத்தின் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன எனத் தெரிவித்த அவர், தற்போது வெவ்வேறு கட்சிகளாக நாம் இருந்தாலும் இவற்றை மறுக்கின்றேன் எனக் கூறினார்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவுக்கோ அல்லது பாதுகாப்பு அமைச்சராக இருந்த ருவான் விஜேவர்த்தனவுக்கோ எவ்வித தொடர்பும் கிடையாது. இந்த விவகாரத்தில் பொறுப்புக் கூறவேண்டிய இந்த அரசாங்கம் கைது நடவடிக்கைகளை மட்டும் செய்யாமல் அவர்களை நீதிமன்றங்களில் முன்னிலைப்படுத்தி தண்டனை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்தார். (ற-இ)

### பிரதமர் மஹிந்தவின்

## ஒருங்கிணைப்பு செயலாளருக்கும் தொற்று உறுதி!

கொழும்பு, ஜன.13

பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் அரசியல் விவகாரங்களுக்கான ஒருங்கிணைப்புச் செயலாளர் குமாரசிறி ஹெட்டிகே கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளார் என நாடாளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவர் இறுதியாக கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்துக்கு விஜயம் செய்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் சி.சி.டி.வி. காணொலிக் காட்சிகளை அடிப்படையாகக் கொண்டு அவருடன் தொடர்புகளைப் பேணிய நபர்களை அடையாளம் காண நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனினும் இந்த நிலைமை காரணமாக நாடாளுமன்றத்தின் நடவடிக்கைகளுக்கு எந்தத் தடையும் ஏற்படாது என்றும் வழக்கம் போல கடமைகள் முன்னெடுக்கப்படும் என்றும் நாடாளுமன்ற படைக்கள சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (ந-இ)

### தொற்றுக்குள்ளான

## ஒருங்கிணைப்பு செயலாளருடன் மகிந்த தொடர்பில் இருக்கவில்லை

### *சாட்சி சொல்கிறார் யோசித*

கொழும்பு, ஜன.13



பிரதமர் மகிந்த ராஜபக்ச கொரோனா வால் பாதிக்கப்பட்டுள்ள தனது ஒருங்கிணைப்புச் செயலாளர் குமாரசிறி ஹெட்டிகேயுடன் தொடர்பிலிருக்கவில்லை என யோசித ராஜபக்ச தெரிவித்துள்ளார். குமாரசிறி ஹெட்டிகே பத்து நாள்களுக்கு முன்னரே பிரதமரைச் சந்தித்தார்.

எனினும் அவருடன் தொடர்பிலிருந்த பிரதமரின் அலுவலகத்தைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரிகள் மூவர் தனிமைப்படுத்தலை முன்னெடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். இவர்களில் எவரும் சமீப நாள்களில் பிரதமருடன் நெருங்கிய தொடர்பில் இருக்கவில்லை. ஹெட்டிகேயுக்கு அலரிமாளிகையில் அலுவலகமில்லை என்றும் யோசித மேலும் தெரிவித்துள்ளார். (வ-இ)

## கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் மேலும் 6 தொற்று

கொழும்பு, ஜன.13

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தைச் சேர்ந்த 6 ஊழியர்கள் கொரோனாத் தொற்றாளர்களாக நேற்று முன்தினம் இனங்காணப்பட்டுள்ளனர். இதனையடுத்து, கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் இதுவரை 599 பேர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என சுகாதார சேவைகளின் மாவட்ட பணிப்பாளர் டாக்டர் மிகாரா எப்பா தெரிவித்தார். (ச-இ)

# ஆணைக்குழு அறிக்கையின் பின்னரே சட்ட நடவடிக்கை

### *ஏப்.21 தாக்குதல் தொடர்பில் சரத் வீரசேகர*

கொழும்பு, ஜன.13

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கைக்காக காத்திருப்பதால் சட்ட நடவடிக்கை எடுப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார். மேலும், இவ் விசாரணை அறிக்கை ஜனவரி 31 ஆம் திகதி கிடைக்கப் பெறும் என்று



நான் எதிர்பார்க்கின்றேன். அதனை ஆராய்ந்த பின்பு மேலும் பல சாட்சியங்கள் ஆய்வு செய்யப்படும். பொறுப்புக்கூற வேண்டியவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு சட்டமா அதிபரால் 12 சட்டத்தரணிகள் அடங்கிய குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள் ளது. தாக்குதல்களில் கொல்லப்பட்டவர்களில் அமெரிக்க பிரஜைகளும் இருப்பதால், பொருத்தமான தகவல்கள் அமெரிக்க நீதிமன்றங்களுக்கும் சமர்ப்பிக்கப்படும் என்றும் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார். (ந-இ)

# இன்றைய நாள்





**மேடம்:** கலைத்துறையினருக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கக் கூடும். பணியாளர்களுக்கு வேலைப்பளு அதிகமாகும். சுமுக மான நாள். திருமணம் கூடிவரும்.



**இடபம்:** செலவுகள் அதிகரிக்கலாம். பொறுமை மிக அவசியம். காலையில் வருத்தம் ஏற்பட்டு மாலையில் நீங்கிவிடும். பொரு ளாதாரத்தில் எந்தவித மாற்றமும் ஏற்படாது.



**மிதுனம்:** செலவுகள் அதிகரிக்கும். மன உளைச்சல் நீங்கும். சவால்களைச் சமாளிக்கும் திறனை வளர்த்துக் கொள்வீர்கள். உணவு விஷயத்தில் அக்கறை கொள்வது மிகவும் நல்லது.



**கடகம்:** பிள்ளைகளின் முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும் நாள். தாய் வழி உறவினர்களால் தேவையற்ற பிரச்னைகள் வரலாம். உதவிகளும், நன்மைகளும் வரும்.



**சிம்மம்:** உங்களால் தீர்க்க முடியாத பிரச்னை உங்கள் நண்பர்க ளால் தீரும். எதிர்பாலினத்தைச் சேர்ந்த நட்பின் மூலம் ஆதாயம் கிடைக்கும்.சேமிப்பில் கவனம் செலுத்துங்கள்.



**கன்னி:** குடும்பத்தில் ஒருவர் வெளிநாடு செல்ல ஏற்பாடாகும். மற்றவர்களுடன் வாக்குவாதம் செய்வதை தவிர்த்து விடுங்கள். கவனமான செயல்களால் அவப்பெயரிலிருந்து தப்புவீர்கள்..



**துலாம்:** பொழுதுபோக்கு அம்சங்களால் கவலைகளை மறப்பீர்கள். பணியிடத்தில் சின்னச் சின்ன பிரச்சினைகள் தோன்றி மறையும். உங்கள் திறமைகளை வெளிப்படுத்தி பாராட்டு பெறுவீர்கள்.



**விருச்சிகம்** பணவரவும், மகிழ்ச்சியும் நீடிக்கும். எதிரிகள் கதிகலங்குவர். பேச்சில் கவனம் தேவை. இல்லையென்றால் சிரமம் வரும். பல காலமாக காத்திருந்த நன்மை ஒன்று இன்று நிகழும்.கிடைக்கும்.



**தனுசு** உங்கள் குடும்பத்தில் உள்ள பெரியவர்களின் ஆசி கிடைக்கும். பொருளாதார நிலையில் இருந்து வந்த மந்த நிலை நீங்கும். தடைகளும், தாமதங்களும் தீரும்.



**மகரம்** பணியில் இது நாள் வரை இருந்த குழப்பங்கள் தீரும். நியாயமான காரணத்தால் கடன் வாங்கும் சூழல் ஏற்படலாம். குடும்பத்தினர் உங்களுக்கு எப்போதும் பக்கபலமாக இருப்பர்.



**கும்பம்:** உடற்சோர்வு ஏற்படலாம். அழகுணர்ச்சி கூடுதலாகும். தீய வழியில் பணவரவுக்கு வாய்ப்பு வந்தால் ஏற்க வேண்டாம். பொருளாதார நிலையைப் பற்றி கவலைப்படாதீர்கள்.




**மீனம்:** வேலைகளை விரைந்து முடித்து நிம்மதி காண்பீர்கள். பிள்ளைகளால் பெருமை ஏற்படும். சேமிப்பு பயன்படும். உறவினரி டம் எதிர்பார்த்த ஆலோசனை உங்களைத் தேடி வரும்.

# வவுனியா நகரில் 1,100 பி.சி.ஆர்

வவுனியா, ஜன.13

பட்டாணிச்சூர் பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 7 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து பட்டாணிச்சூர் உட்பட சில கிராமங்கள் முடக்கப்பட்டது டன், இத் தொற்றாளர்களுடன் தொடர்புடைய நகர வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மற் றும் ஊழியர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட் டது. பகுதி பகுதியாக முடிவுகள் வெளியாகிய நிலையில் வவு னியா நகரில் இதுவரை 103 கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர். அதன் பிரகாரம் பசார் வீதி, தர்மலிங் கம் வீதி, சந்தை வீதி , கொரவப் பொத்தானை வீதி, மில் வீதி, சூசைப்பிள்ளையார் குளவீதி , முதலாம் குறுக்குத்தெரு, இரண் டாம் குருக்குத்தெரு, பழைய பேருந்து நிலையம் என்பன பொலிஸாரின் கட்டுப்பாட்டுக் குள் கொண்டுவரப்பட்டுள்ள துடன் அப்பகுதி வர்த்தக நிலைய ஊழியர்கள் மற்றும் உரிமையா ளர்களுக்கு பி.சி.ஆர் பரிசோத னையும் மேற்கொள்ளப்பட்டது. அதன்படி கடந்த 24 மணி நேரத்தில் மாத்திரம் பழைய பஸ் நிலையம், கொரவப்பொத்தான வீதி , புகையிரத நிலைய வீதி ஆகிய இடங்களில் அமைக்கப் பட்ட பி.சி.ஆர் பரிசோதனை மையத்தில் 1100 நபர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என சுகாதார பிரிவினர் தெரிவித்துள் ளனர். மேலும் வவுனியா மாவட் டத்தில் கடந்த இரு வாரங்களுக் குள் பட்டாணிச்சூர் பகுதியில் 13 பேரும் நகர வர்த்தக நிலையப் பகுதி பரிசோதனையில் 103 பேரும் வவுனியா வைத்தியசா லையில் 7 பேரும் புளியங்குளத் தில் ஒருவரும் உட்பட 124 கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளமை குறிப்பி டத்தக்கது. (ந-18)



# விவேகானந்தரின் பிறந்த நாள்: தடைவிதித்தனர் சுகாதாரப்பிரிவினர்

### *மீறினால் தனிமை என எச்சரிக்கை*

வவுனியா, ஜன.13

சுவாமி விவேகானந்தரின் 158 ஆவது பிறந்ததினம் நேற்று பரவலாக அனுஷ் டிக்கப்பட்டது.

இந்நிலையில் வவுனியா புகையிரத நிலைய வீதியில் அமைந்துள்ள சுவாமி விவேகானந்தரின் நினை வுத்தூபி நகரசபையினரால் துப்புரவுசெய்யப்பட்டு, பிறந் தநாளை அனுஷ்டிப்பதற் குரிய ஏற்பாடுகள் முன்னெ டுத்த நிலையில், அதற்கு சுகாதாரப் பிரிவினர் தடை விதித்துள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் கொரோனாத் தொற்றாளர் கள் அண்மைய நாள்க ளாக சடுதியாக அதிகரித்து வரும் நிலை காரணமாக, சுகாதார பிரிவினரால் இத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட் டுள்ளதுடன், தடையை மீறி பிறந்த தினம் அனுஷ்டிக்கப் பட்டால், நிகழ்வில் பங்குபற் றுவோர் தனிமைப்படுத்த லுக்கு உட்படுத்தப்படுவார் கள் என உத்தரவும் பிறப் பித்துள்ளனர்.

இதன் காரணமாக நேற்றுக் காலை 8.30 மணியளவில் இடம்பெறவிருந்த சுவாமி விவேகானந்தரின் 158வது பிறந்ததினம் நிகழ்வு நிறுத் தப்பட்டுள்ளது. (ந-18)



# அமைச்சரவையில் விரைவில் மாற்றம்?

கொழும்பு, ஜன.13

அடுத்த சில தினங்களில் அமைச்சரவையில் பெரிய மாற் றங்கள் செய்யப்படவுள்ளன எனத் தகவல்கள் வெளியாகியுள் ளன. கடந்த காலம் முழுவதும் கடும் எதிர்ப்புகளை முன்வைத்து வரும் நீதியமைச்சு மற்றும் துறைமுகம், கப்பல் துறை அமைச்சு உட்பட பல முக்கிய அமைச்சுப் பொறுப்புகளில் மாற் றங்கள் செய்யப்பட வுள்ளன எனக் கூறப்படுகிறது. இந்த அமைச்சரவை மாற்றத்துக்கான வரைவு ஒன்றை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ச உருவாக்கி வருகிறார் எனத் தெரிய வருகிறது. இந்த அமைச்சரவை மாற்றத்தின் போது ஐக்கிய மக் கள் சக்தியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரான டயனா கமகேவுக்கு ராஜாங்க அமைச்சர் பதவி வழங்கப்படவுள் ளது எனத் தெரியவருகின்றது. அமைச்சுப் பதவிகளில் நியமிக் கப்பட்ட அமைச்சர்களுக்கு வழங்கப்பட்ட துறைகளில் கடந்த சில மாதங்களாக ஒரு சிலர் மாத் திரமே திருப்தியடையக் கூடிய பணிகளை செய்துவருகின்றனர் எனவும் இது தொடர்பாக ஜனாதி பதி கடும் அதிருப்தியில் இருக் கின்றார் என்றும் சிங்கள ஊடக மொன்று வெளியிட்டுள்ள செய்தி ...யில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

# ரயில் பயணங்களுக்கான ஆசன முற்பதிவுகள் ஆரம்பம்

கொழும்பு, ஜன. 13

ரயில் சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதால், ஆசன முற்பதிவுகளை நேற்று முதல் ஆரம்பிப்பதற்கு தீர்மா னிக்கப்பட்டுள்ளது.

சுகாதார விதிமுறைகளுக்கு மைய எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் தூரப் பிரதேசங்க ளுக் கான ரயில் சேவைகள் ஆரம் பிக்கப்படவுள்ளன என ரயில்வே பொதுமுகாமையாளர் டிலந்த பெர்னாண்டோ தெரிவித்தார்.

இதற்கமைய, ரயில்களில் விற் பனை நடவடிக்கைகளில் ஈடு படுவது மற்றும் யாசகம் பெறு வது உள்ளிட்ட அனைத்துக்கும் முற்றாக தடை விதிக்கப்பட்டுள் ளது என அவர் தெரிவித்தார்.

மேலும், எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் தினசரி போக்குவ ரத்தில் ஈடுபடும் ரயில் சேவை களும் ஆரம்பிக்கப்படவுள்ளது எனவும் தெரிவித்தார். (ரி5)

# ஜனவரி மாத ராசிபலன்கள்







திறமையையே மூலதனமாக வைத்து வாழ்வில் உயர்ந்த நிலைக்குச் செல்லும் தனுசு ராசியினரே!

ஒழுக்கமாக வாழ வேண்டும் என விரும்புபவர்கள் நீங்கள். இந்த மாதம் வாக்குவன்மையால் எதையும் சாதகமாகச் செய்து முடிப்பீர்கள். திறமை அதிகரிக்கும். திட்டமிட்டபடி செயலாற்றுவதில் கவனம் செலுத்துவீர்கள். துணிச்சலாக எதிலும் ஈடுபடுவீர்கள். வாகனங்களில் செல்லும்போதும் பயணங்களின்போதும் எச்சரிக்கை தேவை.

தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் தமது சாதுர்யமான பேச்சினால் எதிலும் லாபம் காண்பார்கள். வர்த்தகத் திறமை அதிகரிக்கும். பணவரத்தும் திருப்திகரமாக இருக்கும். தொழிலில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் திறமையால் முன்னேற்றமடைவார்கள். இழுபறியாக இருந்த வேலையை துணிச்சலாகச் செய்து முடிப்பீர்கள். நீண்ட நாள்களாக வராமல் இருந்த பணம் கைக்கு வந்து சேரும்.

குடும்பத்தில் அமைதியும் மகிழ்ச்சியும் உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே நெருக்கம் அதிகரிக்கும். பிள்ளைகளிடம் கனிவுடன் பேசுவது நல்லது. விருந்தினர் வருகை இருக்கும். குடும்பப் பிரச்சினைகளில் சாதகமான முடிவே உண்டாகும்.

**பெண்களுக்கு:** துணிச்சலாக எதிலும் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள். வாகனங்களில் செல்லும் போதும் பயணங்களின்போதும் கவனம் தேவை.

**கலைத்துறையினருக்கு:** பயணத்தால் அனுகூலம் உண்டு. அதிக ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். பொருள் வரவில் குறைவு ஏற்பட வாய்ப்பு இல்லை. எந்த நேரத்திலும் கோபம் கலந்த வார்த்தைகளை உதிர்க்காமல் இருப்பது நன்று.

**அரசியல் துறையினருக்கு:** உறுதியும் துணிவும் நிறைந்திருக்கும். பிரபலங்களின் நட்பும், ஆதரவும் கிடைக்கும். அண்டை அயலாருடன் இருக்கும் மனக்கசப்புகள் நீங்கி உற்சாகம் பிறக்கும்.

**மாணவர்களுக்கு:** திறமையால் முன்னேற்றம் உண்டாகும். கஷ்டமான பாடங்களையும் மனோபலத்துடன் கற்று முடிப்பீர்கள். வாகனங்களில் செல்லும்போது கவனம் தேவை.

**மூலம்:**

இந்த மாதம் தொழில் வியாபாரத்தில் இருந்து வந்த பின்தங்கிய நிலை மாறும். எதிர்பார்த்த கோரல்கள் வந்து சேரும். வியாபாரப் போட்டிகளில் இருந்த தடைதாமதங்கள் நீங்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் சாமர்த்தியமாகச் செயல்பட்டு மேலதிகாரிகளின் பாராட்டுகளைப் பெறுவார்கள். பிடித்தமான இடத்துக்கு வேலை மாற்றம் உண்டாகும். சக ஊழியர்கள் நட்புடன் பழகுவார்கள்.

**பூராடம்:**

இந்த மாதம் எவருக்கும் அவசரப்பட்டு வாக்கு கொடுக்காதீர்கள். உங்களுக்குக் கீழ் வேலை செய்பவர்கள் உங்கள் சொல்லுக்குக் கட்டுப்படுவார்கள். பெரிய எதிர்பார்ப்புகள் கைகூடும். அரசாங்க வழியிலும் சலுகைகள் கிடைக்கும். குடும்பத்தில் குதூகலம் நிறையும். குடும்பத்தில் அமைதி குறைவது போல் தோன்றும். சகோதரர்கள் வழியில் ஏதாவது பிரச்சினை தலைதூக்கலாம். கவனம் தேவை. பிள்ளைகள் மூலம் பெருமை கிடைக்கும்.

**உத்திராடம் 1ம் பாதம்:**

இந்த மாதம் விருப்பமான நபரைச் சந்தித்து மகிழ்வீர்கள். கணவன் மனைவிக்கிடையில் அன்பு அதிகரிக்கும். வீண் பேச்சுக்களைக் குறைத்து செயலில் கவனம் செலுத்துவது நல்லது. பணவரத்து திருப்தி தரும். கோபத்தைக் குறைப்பது நல்லது. மாணவர்கள் தன்னம்பிக்கையுடன் செயல்பட்டு கல்வியில் முன்னேற்றம் காண்பீர்கள். எதிர்ப்புகள் விலகும். மனக்கஷ்டம் தீரும்.

# தனியார் வகுப்புகளும் அமைச்சின் கண்காணிப்பில்

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, ஜன.13


தனியார் வகுப்புகள் தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதை அவற்றைக் கண்காணிக்கத் தேவையான நடவடிக்கைகளை அதிகாரபூர்வமாக எடுக்க அமைச்சரவையில் யோசனையொன்று முன்வைக்கப்படவுள்ளது என கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

மாணவர்கள் பெற்றுக்கொள்ளும் கல்வி முறைமை தொடர்பில் கல்வி அமைச்சுக்கு முழுமையான பொறுப்பு உண்டு. கொரோனாவால் தற்போது இணையவழியூடாக கற்றல் நடவடிக்கைகளை தனியார் வகுப்புகளும் முன்னெடுக்கின்றன. இதன் போது அதிக கட்டணம் முறையற்ற விதத்தில் அவற்றால் அறவிடப்பட்டு வருகின்றன. கட்டணத்தைச் செலுத்த முடியாத மாணவர்கள் கற்றல் நடவடிக்கைகளில் இணைத்துக் கொள்ளப்படுவதில்லை. இதனால் மாணவர்கள் உளவியல் ரீதியில் பாதிக்கப்பட்டு வருகின்றனர். எனவே தனியார் வகுப்புகளை கண்காணிக்கத் தேவையான அதிகாரங்களை கல்வி அமைச்சு பெற்றுக் கொள்ள அமைச்சரவையில் யோசனையொன்று முன்வைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)

# கோலங்கள் தரும் அழகு

உடுவிலூர் கலா





பாரம்பரியங்களும் பண்பாடுகளும் தமிழர் வாழ்வியலை அழகுபடுத்துவன. நம் பண்டிகைகள் யாவுமே பாரம்பரியங்களோடு பின்னிப் பிணைந்துள்ளன. வருடத்தின் முதற் பண்டிகையாய் அலங்கரிக்கும் தைப்பொங்கலன்று கோலம் போடுதல் அன்று தொட்டு இன்றுவரை பாரம்பரியமாகத் தொடர்கிறது. கோலம் என்றால் 'அழகு' எனப் பொருள். புள்ளிக்கோலம், தானியக் கோலம், மலர்க் கோலம் என கோலங்கள் பலவகைப்படும். கோலங்கள் ரங்கோலி, ஏர்பான், முகுக்குளு என பல பெயர்களில் இந்திய மாநிலங்களில் அழைக்கப்படுகின்றது. இந்தியாவில் அதிகாலை எழுந்தவுடன் வீட்டு வாசலில் கோலம் போடுவது முக்கிய அன்றாட நிகழ்வாகும்.

தைத்திருநாளில் முற்றத்தை சாணத்தால் மெழுகி சூரிய சந்திரனை வரைந்து அதன் நடுவே பொங்கல் பொங்குவது வழக்கமாகும். இங்கு சாணம் கிருமிநாசினியாகப் பயன்படுகிறது. அரிசிமா, பூக்கள் மற்றும் வேறு தானியங்கள் மூலமும் கோலம் போடப்படும். சிலர் அரிசியை ஊறவைத்து அரைத்தும் கோலம் போடுவர். இக்கோலம் மூன்று நாள்களுக்கு மேல் கலையாது இருக்கும். தானியங்களால் போடப்படும் கோலம் எறும்புகள் மற்றும் பறவைகளுக்கு உணவாகின்றது. நம் விருந்தோம்பல் பண்பாடு இக்கோலங்களில் மூலமும் இயங்கு நிலை கொள்கின்றது.

கோலங்கள் சில மிக எளிதாகப் போடப்படுகின்றன. பெரிதாக பல வர்ணங்களில் போடப்படும் கோலங்கள் செழிப்பையும் மகிழ்ச்சியையும் தருகின்றன. மார்கழி மாதத்தில் போடப்படும் கோலங்கள் உடலுக்கு ஆரோக்கியத்தையும் ஆன்மிகத்தையும் மட்டுமல்ல இறைவனோடு மிக நெருக்கத்தையும் தருகின்றன. வாசலில் கோலம் போடுவதால் வீடு பரவச நிலையை உணர்வது மட்டுமல்ல அசுத்தங்கள் விலக்கி தீய சிந்தனைகளை வாசலோடு நிறுத்திவிடும் உணர்வு ஏற்படுகின்றது.

இந்துக்களின் கலாசாரத்தில் அடங்கியுள்ள கோலங்கள் மறந்து போன நிலையில் அதனை மூட நம்பிக்கையாக கொள்வோரும் உண்டு. கோலங்களில் முக்கிய பங்கு பெண்களுக்கே. அவர்களது கலைநயம், ரசிக்கும் திறன், கைவண்ணம் என்பவை கோலங்கள் மூலமாக வீட்டு வாசல்களில் பதிவாகுவது குறிப்பிடத்தக்க உண்மையே. தொற்று நீக்கல், விருந்தோம்பல், ஆன்மிகம், புத்துணர்வு, தூய்மை, அழகு என்பவற்றை பறைசாற்றும் கோலங்கள் மலேசியா, இந்தோனேசியா போன்ற நாடுகளில் மட்டுமல்ல தமிழர் தமிழர்களாக வாழும் ஒவ்வொரு நாடுகளிலும் அழகாய் மிளிர்கின்றன.



# கூட்டுறவு அரிசி ஆலைகள் சமாளிக்கவல்ல சவால்கள்

■ அம்மான்

பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களில் நவீனத்துவமான பெரிய அரிசி ஆலைகள் வடக்கு மாகாணத்தில் மற்றும் மத்திய தர அரிசி ஆலைகளுமாக மொத்தம் 19 அரிசி ஆலைகள் உள்ளன. தற்போது அவற்றில் எட்டு அரிசி ஆலைகள் சங்கங்களால் இயக்கப்படுகின்றன. மூன்று அரிசி ஆலைகள் ஒப்பந்த அடிப்படையில் தனியாருக்கு வழங்கப்பட்டுள்ளன. நான்கு அரிசி ஆலைகள் இயங்க கூடிய நிலையில் இருந்தும் இயக்கமின்றி காணப்படுகின்றன. நான்கு அரிசி ஆலைகள் வெவ்வேறு காரணங்களால் இயங்கவில்லை. வடக்கு மாகாணத்திலுள்ள பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள சில அரிசி ஆலைகள் தொடர்பில் அவற்றின் உரிமையாளர்களாக கூட்டுறவுச் சங்கங்கள் கூடிய கரிசனை காட்ட வேண்டிய தேவை எழுந்துள்ளது. அதற்கான காரணங்களை இந்தக் கட்டுரை விளக்குகிறது.

**விவசாயிகளிடம் நெல்கொள்வனவு செய்தல்**

அரிசி ஆலையைக் கொண்டுள்ள பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் இயக்குனர் சபையினர் தமது அங்கத்துவ விவசாயிகளிடமிருந்து நிர்ணய விலையில் நெல்கொள்வனவு செய்தல் தொடர்பாக கூடுதல் கவனம் எடுத்தல் வேண்டும். இதனூடாக அங்கத்தவர்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும். அதன் மூலமே கூட்டுறவு ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கத்தை மேலும் அர்த்தமுள்ளதாக்கலாம். இதை விடுத்து இயக்குனர் சபையினர் வெறுமனே தலைமைப்பதவிகளில் இருந்து கொண்டு கூட்டுறவு அரிசி ஆலைகளின் பின்னடைவுக்கு காரணங்களை மட்டும் கூறிக்கொண்டு கதிரைகளை அலங்கரிப்பது பொருத்தப்பாடாக அமையாது. மாறாக கூட்டுறவு இயக்கத்துக்கு அபகீர்த்தியை உண்டு பண்ணும் கைங்கரியமாகவே இருக்கும். வடமாகாணத்தில் வீழ்ச்சியுற்றிருக்கும் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு கூட்டுறவு அமைப்புக்களிடமுள்ள வளங்களை வினைத்திறனாக மாற்றி இயக்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுதல் வேண்டும். அவற்றில் கூட்டுறவுக் கைத்தொழிற்சாலைகள் முக்கியமானவை. சகல விருப்பமுள்ள தரப்புக்களுடனும் இணைந்து பணியாற்றுவதனூடாகவும் கடின உழைப்பு மூலமும் இந்நிலையை வெற்றிகரமாக அடைய முடியும்;.

**அரிசி உற்பத்தி**

கூட்டுறவுச் சங்கங்களின் அரிசி ஆலைகளில் வருடாந்தம் 4 ஆயிரத்து 475 மெற்றிக் தொன் நெல்லை அரிசி ஆக்கக் கூடிய நிலையிருந்தும் கூட்டுறவுச் சங்கங்கள் 2020ஆம் ஆண்டில் 7 லட்சத்து 98 ஆயிரத்து 407 கிலோகிராம் நெல்லை மட்டுமே விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்துள்ளன. இந்நிலையில் அரிசி ஆலைகளை தொடர்ச்சியாக இயக்குதல் மற்றும் அதற்காக விவசாயிகளிடம் இருந்து நெல் கொள்வனவை மேற்கொள்ளுதல் என்ற விடயங்கள் முக்கியமாக கவனிக்க வேண்டியவையாகும். அதேநேரம் 21ஆயிரத்து 777 மெற்றிக் தொன் நெற்களஞ்சிய வசதிகளும் அரிசி ஆலைகளில் உண்டு.

**செயற்பாடுகளை விஸ்தரித்தல்**

வடக்கு மாகாணத்திலுள்ள பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள சில அரிசி ஆலைகளின் செயற்பாடுகள் ஆரோக்கியமாகக் காணப்பட்டாலும் மேலும் செயற்பாடுகளை விஸ்தரிக்க வேண்டிய தேவைப்பாட்டு இடைவெளி இருக்கிறது. கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக மாதாந்தம் விற்பனை செய்ய முடிந்த அரிசியின் சராசரி அளவு 2 லட்சம் கிலோகிராம். எனவே வருடத்திற்கான அரிசி விற்பனை சராசரி 24 லட்சம் கிலோகிராம் ஆகும். வருடத்தில் விற்பனை செய்யக் கூடிய அரிசி அளவிற்கமைவாக கொள்வனவு செய்யப்பட வேண்டிய நெல்லின் அளவு 35 லட்சத்து 30 ஆயிரம் கிலோகிராம் ஆகும். ஏனெனில் நெல் அளவின் ஏறத்தாழ 68 வீதமே அரிசியாகக் கிடைக்கும். இதனடிப்படையில் கால போகத்தில் நிர்ணய விலையில் நெற் கொள்வனவு செய்ய தேவையான நிதியின் அளவு 125 மில்லியன் ரூபா. சிறுபோகத்தில் கொள்வனவு செய்ய தேவையான நிதியின் அளவு 50 மில்லியன் ரூபா.

**வெளிமாகாண வியாபாரிகள் நெல்லை கொள்வனவு செய்தல்**

வடக்கு மாகாணத்திலுள்ள விவசாயிகளின் பெருமளவு நெல்லை சரியான அறுவடைக்காலத்தில் வெளி மாகாணங்களிலிருந்து வரும் வியாபாரிகளே கொள்வனவு செய்து கொண்டு செல்லுதலும் பின்னர் அரிசியாக வடமாகாண மக்களின் நுகர்வுக்கு விற்பனை செய்யப்படுதலும் இடம்பெற்று வருகின்றன. இதன்போது விவசாயிகளுக்கு எதிர்பார்த்த நெல்லுக்கான விலைகள் கிடைக்காமல் போகும் சந்தர்ப்பங்களும் உண்டு. இந்நிலை மாற்றப்பட வேண்டும்.

**அரிசி உற்பத்தி முயற்சியை சிறிதளவே மேற்கொள்ளுதல்**

பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் இவ்வாறாக அரிசி ஆலைகளையும் களஞ்சிய வசதிகளையும் கொண்டிருந்தும் நெல் கொள்வனவிலும் அரிசி ஆலைகள் ஊடான அரிசி உற்பத்தியிலும் கணிசமான அளவு முன்னேற்றங்களை காண்பிக்கவில்லை. அதற்கு பல காரணங்களும் உண்டு.

- சில அரிசி ஆலைகளின் செயற்பாட்டிற்கு தொழிற்படு மூலதனம் இன்மை.
- சில அரிசி ஆலைகளை கொண்டுள்ள பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் தங்களது சங்க நிதியை அரச வங்கிகளில் வைப்பாகக் கொண்டுள்ள போதிலும் குறித்த நிதியைப் பயன்படுத்தி நெல் கொள்வனவு செயற்பாட்டை மேற்கொள்வதற்கு சிறந்த வழிகாட்டல்களும் வழிநடத்தல்களும் அவர்களுக்கு கிடைக்காதிருத்தல்.
- சங்க இயக்குநர் சபைகளின் அக்கறையின்மையும் அசமந்தமும்.
- பணித்தொகுதிகளின் வினைத்திறனான செயற்பாடின்மை.
- அரிசி ஆலை செயற்பாடுகளில் ஈடுபடும் பணித்தொகுதிக்காக ஊக்குவிப்புக்கள் வழங்கப்படாமையும் சம்பளங்கள் தனியாருடன் ஒப்பிடும் போது போதியளவில் காணப்படாமையும்.

**சங்கங்களிலே சந்தை வாய்ப்பு**

அரிசி ஆலைகளின் அரிசி உற்பத்திக்கான சந்தைவாய்ப்பும் பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களிலே உண்டு என்பது ஒரு ஆறுதல் தரும் சந்தைப்படுத்தல் தொடர்பான பொருளாதார நன்மையுடன் கூடிய விடயமாகவே பார்க்கப்பட வேண்டும். பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் கிளைகள், கோப்சிற்றி, மினி கோப்சிற்றி, மக்கள் கடைகளின் ஊடாக சந்தைப்படுத்தக் கூடிய வசதிவாய்ப்புக்கள் நிரம்பியே காணப்படுகின்றன.

**வேலைவாய்ப்பு**

பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு சொந்தமான இயங்கிக்கொண்டிருக்கும் எட்டு அரிசி ஆலைகளில் 60 பணியாளர்கள் பணிபுரிகின்றனர். தனியாருக்கு ஒப்பந்த அடிப்படையில் மூன்று அரிசி ஆலைகள் வழங்கப்பட்டுள்ளன. இதைவிட இயங்கக் கூடிய நிலையில் இருந்தும் நான்கு அரிசி ஆலைகள் செயற்படுவதில்லை. மற்றும் வெவ்வேறு காரணங்களால் இன்னும் 4 அரிசி ஆலைகள் இயக்கமின்றியுள்ளன. இந்த அரிசி ஆலைகளில் சுமார் 120 பணியாளர்கள் பணிபுரிந்துள்ளார்கள். எனவே 19 அரிசி ஆலைகளும் முழுமையாக இயங்குமாயின் வடக்கு மாகாணத்தில் 720 இற்கு மேற்பட்டோர்களுக்கான வேலைவாய்ப்பையும் வழங்கக் கூடியதாவுள்ளது.

**வடக்கு மாகாணத்தினுடைய பொருளாதாரத்தில் பங்களிப்பு**

வடக்கு மாகாணத்திலுள்ள பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு சொந்தமான அரிசி ஆலைகள் என்பது வடக்கு மாகாணத்தின் பொருளாதாரத்திற்கு வலுச் சேர்க்கும் நிலையான சொத்துக்களாகும். இத்தகைய நிலைமையில் தொடர்ந்தும் பல்வேறு காரணங்களைக் கூறிக்கொண்டு அரிசி ஆலைத் தொழிற்பாடுகளை சாதாரண விடயமாகப் பார்க்க முடியாது. இந்த விடயத்தில் வடக்கு மாகாணத்திலுள்ள அனைத்து கூட்டுறவாளர்கள் உள்ளிட்ட மக்கள் சேவகர்களும் விழிப்படைய வேண்டும். வடக்கு மாகாணத்திலுள்ள பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் அரிசி ஆலைகளை தொடர்ச்சியாக இயங்க வைக்கும் செயற்பாடானது கூட்டுறவுச் சங்க தீர்மானத்தி லேயே தங்கியிருப்பினும் அதன் நிலைபேறான இயங்குகைக்கு எல்லோரது கூட்டுச் சிந்தனை அவசியமாகவுள்ளது. வடக்கு மாகாண ஆளுநர், பிரதம செயலாளர், மாவட்டச் செயலர்கள், கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் குறித்த சங்கங்களின் இயக்குனர் சபையினர் என அனைவரினதும் கூட்டுறவுச் சிந்தனையின் அடிப்படையில் வடக்கு மாகாணத்திலுள்ள மிகவும் பெரும் சொத்தாகவுள்ள அரிசி ஆலையை இயங்க வைப்பதன் ஊடாக வடக்கு மாகாணத்திலுள்ள விவசாயி களின் பொருளாதாரத்தை மேல்நிலைக்குக் கொண்டுவர முடியும் என்பது திண்ணம்.

**வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கி**

அரிசி ஆலையை இயக்குவதற்கான ஆலோசனை வழிகாட்டல்களை வழங்குவதற்கு வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கியும் தயாராகவே உள்ளது. குறித்த வங்கி கூட்டுறவு அமைப்புக்களின் பல்வேறு தொழிற்பாடுகளுக்கான தொழில்நுட்ப ரீதியான வழிகாட்டல்; மற்றும் நிதிப்பயன்பாடுகள் தொடர்பான வழிகாட்டல்களைத் தற்போது வழங்கிவருகின்றது. வடக்கு மாகாணத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்தக்கூடிய மிகப்பெரும் சொத்து ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அதற்கான நிதியீட்டல் வழிமுறைகளையும் நேர்த்தியான தொழிற்பாட்டு ஏற்பாடுகளையும் இனங்கண்டு நிறைவேற்றிக் கொள்ளல் தற்போது அனைவருக்குமுள்ள சவாலாகும்.

# வான்கதவுகளை திறந்ததால் வயல்கள் அழியும் அபாயம்

## விவசாயிகள் கவலை

கிளிநொச்சி,ஜன.13

**பெய்துவரும் கனமழை காரணமாக இரணைமடு வான் கதவுகள் திறக்கப்பட்டதைத் தொடர்ந்து பல ஏக்கர் நிலப்பரப்பில் அறுவடைக்கு தயார் நிலையிலிருந்த நெற்பயிர்கள் அழிவடையும் அபாயமுள்ளது என்று விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.**

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது; பன்னங்கண்டி, முரசுமோட்டை, கண்டாவளை. போன்ற இடங்களில் உள்ள வயல்களை இரணைமடுக்குளத்து நீர் மூடியுள்ளதால் இந்தநிலை ஏற்பட்டுள்ளது. கடந்த வருடம் பருவமழை பிந்தியதாலும் அதிகரித்த மழைப்பொழிவு காரணமாகவும் ஏற்கனவே எதிர்பார்த்த விளைச்சல் கிடைக்காமல் போனது. எனினும், தற்போது அறுவடைக்கு தயாரான நிலையில் வயல் நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளதால் பல ஏக்கர் நெற்பயிர்கள் நாசமடையும் அபாயத்திலுள்ளன. என்றனர். (ஐ-ரி1)

# உக்ரைனிலிருந்து 165 பேர் வருகை

கொழும்பு,ஜன.13

உக்ரைன் நாட்டிலிருந்து மேலும் 165 சுற்றுலாப் பயணிகள் நேற்று இலங்கைக்கு வருகை தந்தனர்.

கொரோனா பரவல் அச்சுறுத்தலுக்கு மத்தியில், உரிய சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளுக்கு அமைவாக அவர்கள் நாட்டுக்குள் அழைத்து வரப்பட்டனர் என்று விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, 180 சுற்றுலாப்பயணிகளுடன் இலங்கைக்கான முதல் உக்ரைனிய பயணிகள் விமானம் டிசெம்பர் 28ஆம் திகதி மத்தள விமான நிலையத்தில் தரையிறங்கியிருந்தது.

அவர்களில் இதுவரையில் 6 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-இ)

# இலங்கையில் மேலும் 4 தங்கச் சுரங்கங்கள்

கொழும்பு, ஜன.13

இலங்கையில் நான்கு இடங்களில் தங்கம் புதைந்திருப்பது புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று பேராதெனிய பல்கலைக்கழகத்தின் புவியியல் துறையின் மூத்த பேராசிரியர் அதுல சேனரத்ன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

முன்னதாக சேருவில பகுதியில் தங்கம் கண்டுபிடிக்கப்பட்டது. இப்போது அதற்கு மேலதிகமாக 4 இடங்களில் தங்கம் இருப்பது ஆராய்ச்சி மூலம் தெரிய வந்துள்ளது. இந்த தங்க சுரங்கங்கள் கிழக்கு, மத்திய, ஊவா மற்றும் தெற்கு மாகாணங்களில் அடையாளம் காணப்பட்டுள்ளன.

சேருவில பகுதியில் உள்ள இரும்புத்தாதுத் தளங்களிலிருந்து சுமார் மூன்று முதல் நான்கு கிலோமீற்றர் தூரத்தில் தங்க சுரங்கம் கண்டுபிடிக்கப்பட்டது. பூமியின் மேற்பரப்பில் இருந்து சுமார் 600 அடி ஆழத்தில் அகழ்வாராய்ச்சி செய்த பின்னர் சேருவில பகுதியில் தங்கம் இருப்பது முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்டது என்றார். (ப)

# இடம்பெயரும் நிலையில் 25 குடும்பங்கள்

கிளிநொச்சி, ஜன.13

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட நாகேந்திரபுரம் பகுதியில் உள்ள 25 குடும்பங்கள் இடம்பெயரும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

தற்போது பெய்து வரும் கனமழை காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளது. அந்தக் கிராமத்துக்கான வீதியைச் சீரமைத்துத்தருமாறு பலரிடம் கோரிய போதும், இதுவரை வீதி சீரமைக்கப்படாததால், போக்குவரத்து முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளதுடன், படகு மூலம் போக்குவரத்தில் ஈடுபடவேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது என்று மக்கள் சுட்டிக்காட்டினர். (ப-113)

# உயர் நீதிமன்றில் தீ: விசாரணைகள் தீவிரம்

கொழும்பு,ஜன.13

கொழும்பு உயர் நீதிமன்றக் கட்டடத்தில் ஏற்பட்ட தீப் - பரவலுக்குப் பொறுப்புக்கூற வேண்டிய, சந்தேகநபர்கள் ஐவர் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரின் விசாரணைகளும் தொடர்கின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கட்டடத்தில் வீசப்பட்ட சிகரெட்டில் இருந்தே தீ பரவியது என்பதை மறுக்க முடியாது என்று அரச இரசாயன பகுப்பாய்வாளரின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

தீப் பரவல் எரிபொருள் அல்லது மின் ஒழுக்கால் ஏற்படவில்லை என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயர் நீதிமன்றக் கட்டடத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள், உயர் நீதிமன்ற வளாகத்தில் இரகசியமாக புகை பிடித்துள்ளனர் என்று இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயர் நீதிமன்றக் கட்டடத்தில் சிதைவடைந்த பொருள்கள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த பகுதியில், கடந்த வருடம் டிசெம்பர் 15 ஆம் திகதி தீ பரவியமை குறிப்பிடத்தக்கது. (க-இ)

# எம்.பிக்களுக்கு பொது அறிவிப்பு

கொழும்பு,ஜன.13

பொதுச் சுகாதார அதிகாரிகள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும், பொதுவான அறிவுறுத்தலை விடுத்துள்ளனர்.

ஒரு கிழமைக்காவது பொது நிகழ்வுகளில் இருந்து விலகியிருக்குமாறு அவர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான தயாசிறி ஜெயசேகர, ரவூப் ஹக்கீம் மற்றும் வாசுதேவ நாணயக்கார ஆகியோர் ஏற்கனவே கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். அதனையடுத்து இந்தப் பொது அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது. (க)



# கடும் மழை காரணமாக குடிமனைக்குள் வெள்ளம்

கிளிநொச்சி,ஜன.13

வடக்கில் கடந்த இரு நாள்களாக பெய்துவரும் தொடர் மழை காரணமாக தாழ்நிலப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. பல இடங்களில் குடிமனைக்குள் வெள்ளம் புகுந்துள்ளது.பூநகரி பிரதேசத்தின் செக்காலை. அரசபுரம் கிராமத்தில் வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளது. இதனால் இருப்பிடங்களில் தங்கி இருந்து உணவு சமைக்க முடியாத நிலையில் மக்கள் பெரும் பாதிப்புக்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

அரசபுரம், குளத்து நீர் பெருக்கெடுத்ததால், அதனுள் இருக்கும் முதலைகள் மக்களின் வாழ்வாதாரமான ஆடுகள் சிலவற்றை பிடித்துச் சென்றுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த இடர்தொடர்பில் பலதரப்பினரிடம் தெரிவிக்கப்பட்டபோதும் எவரும் கிராமத்துக்கு வந்து பார்வையிடவில்லை என்று பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர். (ஐ-ரி1)

# கொரோனாவிலிருந்து மீள்வது மிகக் கடினம்

## மருத்துவ அதிகாரிகள் தகவல்

கொழும்பு,ஜன.13

கொரோனா உலகளாவிய தொற்றுநோயாக மாறியுள்ளது. எனவே இந்தச் சூழ்நிலையிலிருந்து எவரும் தப்பிக்க முடியாது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சம்மேளனத்தின் செயலாளர் ஹரித அழுத்கே தெரிவித்துள்ளார்.


புதிய இயல்புநிலை மற்றும் சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றி, பொதுமக்கள் இன்னும் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் கொரோனா வைரஸுடன் வாழ வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது.

இந்த முக்கியமான காலகட்டத்தில் மோசமான அச்சுறுத்தலில் இருந்து தப்பிப்பதைப் பற்றி எவரும் யோசிக்கக் கூட முடியாது.

இந்த வைரஸை ஒழிப்பதற்கான காலத்தை உலக சுகாதார அமைப்பால் கூடக் கணிக்க முடியவில்லை. கொரோனாத் தடுப்பூசிகள் வந்து கொண்டிருக்கின்றன, ஆனால் அவை முன்னர் இருந்ததைப் போன்ற ஒரு வாழ்க்கையை வாழ உதவக்கூடும் அல்லது உதவாமலும் போகலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

## 16ம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 18 . 11 . 1971



மறைவு 30 . 12 . 2020

### அமரர் வை.சிவஜோதி

(நிர்வாக இயக்குனர், Little Aid நிறுவனம், கிளிநொச்சி)

எமது ஆருயிர் நண்பனே!
நட்பின் ஒளி விளக்கே!
சமூகப் பணியாளனே மக்களின் தொண்டனே!
எம்மை விட்டு நிரந்தரமாய் சென்றதேனோ
காலனவன் அழைத்திடவே இறையடி சேர்ந்துவிட்டாய்
என்றும் அணையா ஜோதியாய் (அணையா ஒளி விளக்காய்)
உனது நினைவுகள் எம் நெஞ்சங்களில்
என்றும் நிரந்தரமாய் பூத்திருக்கும்
நீங்காத நினைவுகளுடன்
கனத்த இதயத்துடன் விழி நீராய் நிற்கின்றோம்
உனது ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டி பிராத்திக்கின்றோம்.

**நண்பர்கள்.**
The Open University of Sri Lanka
Faculty of Engineering Technology (92 - 95)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 13 . 01 . 1954



உதிர்வு 13 . 12 . 2020

பிறந்தநாளே நினைவு நாளானது

### அமரர் அல்பிரட் ஜெபரட்ணம் கதிர்காமர்

(ஓய்வுநிலை கொமர்சல் வங்கி ஊழியர்)

யாழ். சுண்டுக்குளியை பிறப்பிடமாகவும் நவாலி தெற்கு மானிப்பாயை வாழ்விடமாகவும் கொண்ட அமரர் அல்பிரட் ஜெபரட்ணம் கதிர்காமர் அவர்களின் அமரத்துவச் செய்திகேட்டு ஆறாத்துயர் அடைந்தோம்.

தானாகவே வலிந்து தவமுன்வந்து மாதாந்தம் தொடர்சியாக
நிதிப்பங்களிப்புகள் வழங்கி எமது வைத்தியசாலையின்
அபிவிருத்தியில் தன்னையும் இணைத்துக் கொண்ட பெருந்தனியே
உங்கள் மலர்ப்பாதங்களுக்கு இவ்வஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்

"இருந்தாலும் மறைந்தாலும் பெயர் சொல்ல வேண்டும்
இவர் போல யாரென்று ஊர் சொல்ல வேண்டும்"

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

என்றும் மறவா நினைவுகளுடன்
**மானிப்பாய் பிரதேச வைத்தியசாலை**
**நோயாளர் நலன்புரிச்சங்கம்**
**வைத்தியசாலை நிர்வாகம்.**

# மரண அறிவித்தல்

## திரு. வேலாயுதம் கந்தசாமி J.P

### (ஓய்வுபெற்ற உதவி அரசாங்க அதிபர்)



பிறப்பு 03.09.1928 இறப்பு 09.01.2021

நெல்லியடியைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதம் கந்தசாமி அவர்கள் 09-01-2021 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லம்மா - வேலாயுதம் தம்பதிகளின் அன்பு புதல்வனும், காலஞ்சென்ற சிவசிதம்பரம் - பறுவதம் தம்பதிகளின் மருமகனும், தேவசேனாவின் பாசமிகு கணவரும், சியாமளா, குமுதினி, சிவசிதம்பரம், குருபரன், இளவேந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், யோகமூர்த்தி, காலஞ்சென்ற தேவானந்தன் மற்றும் சிவலோஜினி, கலைவாணி, Dr. வித்யா ஆகியோரின் அன்பு மாமனாரும், யோகிலோகன், ராஜ்லோகன், கோசலை, அச்சுதன், ஆரணி, அஸ்மிகா, பாலவிநோதன், ஓர்பிதா, Dr.விக்ரோறியா ஆகியோரின் அன்பு பேரனும், ரயன், ஆர்யா, நைலா, ரபா [RAFA], அலானா ஆகியோரின் பாசமிகு பூட்டனும், ஞானேஸ்வரியின் அன்பு சகோதரரும், மாலினி, சுபத்திரா, மாலதி ஆகியோரின் அன்பு மாமனாரும், விமலேஸ்வரி, நகுலேஸ்வரி காலஞ்சென்றவர்களான கனகரத்தினம், கனகாம்பிகை ஆகியோரின் உடன் பிறவாத சகோதரரும், தேவராஜன், இளையபத்மநாதன், கதிர்காமத்தம்பி, பாக்கியம் காலஞ்சென்ற செல்வராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

**அன்னாரது இறுதிச் சடங்குகள் பற்றிய விபரம் பின்னர் அறியத் தரப்படும்.**


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்**
**குடும்பத்தினர்**

| | | |
|---|---|---|
| திருமதி சியாமளா யோகமூர்த்தி | - லண்டன் | - + 447 8243 21218 |
| திருமதி குமுதினி தேவானந்தன் | - கனடா | - + 190 5296 7643 |
| திரு. சிவசிதம்பரம் கந்தசாமி | - லண்டன், சிங்கப்பூர் | - + 659 655 7834 |
| திரு. குருபரன் கந்தசாமி | - லண்டன் - லிவப்பூல் | - + 447 7651 55543 |
| திரு. இளவேந்தன் கந்தசாமி | - அவுஸ்ரேலியா | - + 614 146 85144 |

## மரண அறிவித்தல்

பிறப்பு
29 . 11 . 1927



இறப்பு
11 . 01 . 2021

# திரு.கார்த்திகேசு ஜெகநாதன்

(இளைப்பாறிய அதிபர் - நயினாதீவு மகாவித்தியாலயம். எருக்களம்பிட்டி மகாவித்தியாலயம். வேலணை மத்திய கல்லூரி. யாழ். மத்திய கல்லூரி. அநுராதபுர விவேகானந்த தமிழ் மகா வித்தியாலயம். ரத்மலானை இந்து கல்லூரி. விரிவுரையாளர் - Butterworth College of Education -South Africa)

மலேசியா Batu - Gajah ஐ பிறப்பிடமாகவும் தொல்புரம். அநுராதபுரம். கொழும்பு. தென் ஆபிரிக்கா. நியூஸிலாந்து. அவுஸ்திரேலியா (Perth) ஆகிய இடங்களை வதிவிடங்களாகக்கொண்ட திரு.கார்திகேசு. ஜெகநாதன் 11.01.2021 திங்கட்கிழமை அவுஸ்திரேலியாவில் (Perth) சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - கார்த்திகேசு (மலாயன் ஓய்வூதியதாரர்) அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும். காலஞ்சென்றவர்களான சம்பந்தர் நடராஜா JP (Crown Proctor & Chairman Urban Council Anuradhapura, Sri Lanka), காந்திமதி தம்பதியரின் அன்பு மருமகனும். காலஞ்சென்ற சகுந்தலா (இளைப்பாறிய ஆசிரியை) அவர்களின் அன்புமிக்க கணவரும். மைதிலி (Auckland), ஜனார்த்தனா (Canberra), சஞ்சயன் (Perth), காலஞ்சென்ற பிரதீபன் ஆகியோரின் அருமைத் தந்தையும். சத்தியநாதன் (Auckland), யசோதரா (Canberra), சிவாஜினி (Perth), ஆகியோரின் அன்பு மாமனும். காலஞ்சென்றவர்களான பாலாம்பிகை அம்பாள். தங்கரத்தினம். சண்முகநாதன். இராசம்மா. வள்ளிநாயகி அம்மாள். சரஸ்வதி அம்மாள். காசிவிஸ்வநாதன். சிதம்பரநாதன் மற்றும் பஞ்சாட்சரநாதன் (Sydney), கனகாம்பிகை அம்பாள் (London), சிவகாம்பிகை அம்பாள் (Colombo), ஆகியோரின் பாசமிகு சகோதரனும். கஜானன் - ஸ்மிதா (Brisbane) மயூரன் - அனந்தினி (Sydney), ஜனனி (Sydney),சைதன்யா (Perth), அமிதாப் (Perth), அபர்ணா (Perth) ஆகியோரின் பாசமிகு பேரனும். லலிதா மயூரியின் (Brisbane) அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இந்து சைவ அபரக்கிரியைகள் இன்று (13.01.2021) புதன்கிழமை காலை 9.30 முதல் 11.30 வரை Mareena Purslowe Funerals, 31 - 33 Townshend Road, Subiaco - 6008,W.Australia என்ற முகவரியில் நடைபெற்று பகல் 12.15 மணியளவில் Karrakatta - Perth மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் தொடர்புகளுக்கு:**

**மகள் - மைத்திலி + 64 210 296 6534**
**மகன் - ஜனார்த்தனா + 61 450 402 229**
**மகன் - சஞ்சயன் + 61 402 184 428**

## மரண அறிவித்தல்

பிறப்பு
21 . 04 . 1947



இறப்பு
12 . 01 . 2021

# சுதிராகமணி சண்முகராசா

சித்திரமேழி இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுதிராகமணி சண்முகராசா நேற்று (12.01.2021) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கப்பிள்ளை தம்பதியரின் ஏகபுத்திரியும். காலஞ்சென்றவர்களான துரையப்பா - நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும். காலஞ்சென்ற சண்முகராசாவின் பாசமிகு மனைவியும். கஜனன். கஜவதனி. கஜவதனன். கஜரூபன். கஜந்தி ஆகியோரின் பாசமிகு தாயும். தாரணி. கிஷோன். சுபானுஜா. திவ்வியராஜ் ஆகியோரின் அன்பு மாமியும். காலஞ்சென்றவர்களான சண்முகலிங்கம். மகேந்திரலிங்கம். கணேசலிங்கம். முத்துக்குமாரலிங்கம் ஆகியோரின் அன்புத் தங்கையும். காலஞ்சென்ற பரமேஸ்வரி. தனலட்சுமி. பாலசரஸ்வதி. காலஞ்சென்ற சரோஜினிதேவி. தேவராசா. காலஞ்சென்ற ரஞ்சனாதேவி. காலஞ்சென்ற சற்குணராசா ஆகியோரின் பாசமிகு மைத்துனியும். சுவாதிகன். ஷாகிஸ்னுகன். மகிஷாங்கன். யஸ்னவி. ஜொனோதன் ஆகியோரின் ஆசைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.01.2021) புதன்கிழமை காலை 8.00 மணியளவில் தும்மலை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சேந்தான்குளம் பாதர் காடு இந்து மாயனத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 354 5288**

## JOB Bank



வேலையாட்கள் தேவையா?
உங்கள் நிறுவனங்களிலிருக்கும் (Vacancy) பதவி வெற்றிடங்களுக்கு பொருத்தமான உத்தியோகத்தர்களை எம்மிடமிருந்து தெரிவுசெய்து பெற்றுக்கொள்ளலாம்.

DΣWMΛS
Call,Viber, Whats App: 0741 38 33 68
Call : 075 022 6733
Tel : 021 315 2500
51, Amman Road, Nallur.

## தேவை

பிரபல்யமான சஞ்சிகைக்கு பக்கவடிவமைப்பு செய்யக் கூடிய முன் அனுபவமுள்ள

*** Page maker** *** Corel Draw**
*** Indisign** *** Photo Shop**

அனைத்திலும் பரீட்சையமுள்ள பக்க வடிவமைப்பாளர் உடனடியாகத் தேவை.

**தொடர்பு:- 077 795 2490, 021 315 1140**
**ccimanagement100@gmail.com**
**No 196, Point Pedro Road, Sirampaiyadi, Jaffna.**

## 34 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
09 . 02 . 1937



இறப்பு
21 . 12 . 1987


# சீனியர் செல்லத்துரை

*பாசத்தின் உறைவிடமாய்*
*பண்பின் சிகரமாய்*
*பாசத்தால் அரவணைத்து*
*வழிகாட்டிய எங்கள் அப்பாவே!*
*உங்கள் நினைவுகளில்*
*மிதக்கின்றோம் அப்பா!*

"ஈஸ்வரி வாசம்"
உரும்பிராய் மேற்கு,
கந்தசுவாமி கோயிலடி.

**பிள்ளைகள்**

## மரண அறிவித்தல்



### கந்தன் மோகனச்சந்திரன் (மோகன்)

**பிறப்பு** **15 . 06 . 1973**
**இறப்பு** **06 . 01 . 2021**

வளர்மதி வீதி. கைதடி மத்தியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தன் மோகனச்சந்திரன் (மோகன்) கடந்த 06.01.2021 அன்று லண்டனில் காலமாகிவிட்டார்.

அன்னார் கந்தன் தவமணி ஆகியோரின் அன்பு மகனும். வல்லி செல்லி மற்றும் குமார் மகேஸ்வரி ஆகியோரின் அருமை மருமகனும், புஸ்பலதா தேவியின் (லண்டன்) பாசமிகு கணவரும். லவிஷன் (லண்டன்). ஜவிஷன் (லண்டன்). ஆகியோரின் அன்புத் தந்தையும். லதா (சுவிஸ்). மோகனதாஸ் (சாரதி. யாழ் மாநகரசபை). லமிதா ஆகியோரின் பாசமிகு சகோதரனும். ஜஸ்வியா (சுவிஸ்). சீர்வதன். திவுஸ்வியா ஆகியோரின் பாசமிகு மாமனும். கிஷோன். கிஷோனிக்கா ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும். நாகேந்திரன் (சுவிஸ்). முகுந்தரூபி. மதனரூபன் (ஆசிரியர். யா/கைதடி விக்கினேஸ்வர வித்தியாலயம்). சிவராசா. கமலாதேவி. கௌசலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளும் அஞ்சலி நிகழ்வுகளும் இன்று (13.01.2021) புதன்கிழமை லண்டனில் உள்ள CR7 7JF, Croydoru 374, brigstock road, Eternity conference & event center எனும் இடத்தில் மு.ப 8.00 தொடக்கம் நண்பகல் 12.00 மணிவரை நடைபெற்று பி.ப 1.00 மணிக்கு Rowan Road, Streatham, London எனும் இடத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். அதேவேளை மேற்படி அஞ்சலி நிகழ்வுகள் வளர்மதி வீதி. கைதடி மத்தியில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

**கைதடி**
**தொடர்பு: 077 828 5351**

**தகவல்: குடும்பத்தினர்.**

## புதிய அதிபர் நியமனம்

கிளிநொச்சி.ஜன.13

கிளிநொச்சி திருவையாறு மகா வித்தியாலயத்தின் புதிய அதிபராக கிருஷ்ணபிள்ளை விக்னராஜா நேற்றுமுன்தினம் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

இவர் முன்னர் கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் அதிபராக கடமையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-159)

## இடமாற்றம்

சாவகச்சேரி, ஜன.13

தென்மராட்சி பிரதேச சமுர்த்தி அலகின் தலைமைக் காரியாலய முகாமையாளராகக் கடமையாற்றிய இராயப்பு அன்ரனி, கரவெட்டி பிரதேச செயலகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவரின் இடத்துக்கு நல்லூர் பிரதேச செயலக மகாசங்க முகாமையாளர் திருமதி உமா தேவி ஆறுமுகம் நியமிக்கப்பட்டுள்ளார். (ஐ-9)

# தமிழ் அரசியல் கைதிகள் மீதும் கருணை காட்டப்பட வேண்டும்

## சட்டத்தரணி ஏ.டபிள்யூ. அர்ஜுன் கோரிக்கை

மன்னார், ஜன.13

கொரோனா அச்சம் காரணமாக மனிதாபிமான அடிப்டையில் சிறையில் உள்ளவர்களை விடுவிப்பதற்கான முன்னெடுப்புக்கள் இடம்பெறும் இவ்வேளையில், எவ்வித குற்றப்பத்திரிகையோ அல்லது எவ்வித குற்றச்சாட்டுக்களோ இன்றி சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை இன்னும் கேள்விக்குறியாகவே உள்ளது என்று சட்டத்தரணியும் மன்னார் பிரஜைகள் குழுவின் ஆளுநர் சபை முக்கியஸ்தருமான ஏ.டபிள்யூ. அர்ஜுன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக நான் மூன்று கோணங்களில் பார்க்கின்றேன். அதாவது சட்டக் கட்டமைப்பு, சமூகக் கட்டமைப்பு மற்றும் கொரோனா கட்டமைப்பு என்பனவாகும். தமிழ் அரசியல் கைதிகள் நோக்கும்போது இவர்கள் சட்டத்தினூடாகவும் பின்னர் சமூகத்தினூடாக அணுகி தங்கள் விடுதலையை வலியுறுத்த முயன்றவர்கள், ஆனால் தற்பொழுது இந்த கொரோனா காலத்திலாவது தங்களுக்கு விடுதலை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இருக்கின்றனர். இலங்கையின் நீதிக் கட்டமைமப்பில் போதைப்பொருள்களுடன் தொடர்புபட்டவர்களுக்கு கொரோனா காலமாகிய இக்காலத்தில் மனித நேயம் கொண்டு பிணை வழங்குவதற்கான முன்னேற்பாடுகள் அல்லது அதற்கான சாத்தியக்கூறுகள் இலகுபடுத்தப் பட்டுள்ளன. இவ்வாறான நிலையில் இதுவரைக்கும் குற்றச்சாட்டுக்கள் அல்லது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படாமல், எதுவும் இல்லாத நிலையில் நீண்டகாலமாக சிறைச்சாலையில் வாடிக்கொண்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் இந்த கொரோனாக் காலத்திலாவது விடுதலை செய்யப்பட வேண்டும். இது கைதிகளின் பிரச்சினை மட்டுமல்ல இவர்களை நம்பியிருக்கும் அவர்களின் குடும்பத்தினரது எதிர்பார்ப்பாகவுமுள்ளது. என்றார். (ப-60)

## பொழுதுபோக்கு வரி 2 வருடங்கள் விலக்கு

கொழும்பு,ஜன.13

கொவிட்19 தொற்றுக்கு மத்தியில் உள்நாட்டு திரைப்படத்துறையைப் பாதுகாக்கும் நோக்கில், பொழுதுபோக்கு வரியை இரண்டு வருடங்களுக்கு விலக்களிப்பதற்கு அமைச்சுக்களின் ஒப்புதல் கிடைத்துள்ளது என்று பிரதமரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.ரத்னசிறி மற்றும் புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்தன ஆகியோர் இதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளனர்.

அதற்கமைய 2021 மற்றும் 2022 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்கு பொழுதுபோக்கு வரி விலக்களிக்கப்படும். 2023 ஆண்டு முதல் திரைப்படத்துறைக்கான பொழுதுபோக்கு வரியை 7.5 சதவீதமாக குறைப்பதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது என்றும் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. (க-இ)

## மட்டு. மருத்துவமனையில் 21 பேருக்கு கொரோனா

மட்டக்களப்பு,ஜன.13

மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் சுகாதாரத்துறை சார்ந்த 21பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

மருத்துவமனைப் பணிப்பாளர் கலாரஞ்சனி கணேஸ் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதேவேளை மட்டக்களப்பு போதனா மருத்துவமனைக்கு வருபவர்கள் சுகாதார நடைமுறைகளைப் பேண வேண்டும். நோயாளர்களைப் பார்வையிட 15 நிமிடங்கள் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (க-இ)

## இணக்கசபை அமர்வு ஆரம்பம்

சாவகச்சேரி,ஜன.13

சாவகச்சேரி பிரதேச இணக்க சபை அமர்வுகள் சனிக்கிழமை முதல் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் ஆரம்பமாகியுள்ளன.

அமர்வுகள் பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும் என்று இணக்கசபைத் தவிசாளர் வை.இராசரத்தினம் அறிவித்துள்ளார்

கொரோனாத் தொற்று காரணமாக அமர்வுகளுக்கு வருகைதருவோர் சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடிக்குமாறும் அவர் மேலும் அறிவித்துள்ளார். (ஐ-9)

## வலயக் கல்வி பணிப்பாளருக்கு எதிராக போலி முறைப்பாடுகள்

### வெளுத்தது சாயம்

கிளிநொச்சி, ஜன.13

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளருக்கு எதிராக போலியான முறைப்பாட்டுக் கடிதங்கள் மாகாணத் திணைக்களத்துக்கு அனுப்பபட்டுள்ளன என்று தெரியவந்துள்ளது.

திடீர் மரண விசாரணை அதிகாரியும், ஆயுர்வேத வைத்தியருமான க. திருலோகமூர்த்தியின் பெயரில் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு எதிராக எழுதப்பட்ட முறைப்பாட்டுக் கடிதம் திருலோகமூர்த்தியால் எழுதப்படவில்லை என்று அவரே தெரிவித்துள்ளார். ஓய்வு பெற்ற குறித்த அதிபர் முருகானந்தனின் பெயரிலும் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு எதிராக போலியான கடிதம் அனுப்பட்டுள்ளது. ஓய்வுபெற்ற குறித்த அதிபரும் இது தொடர்பில் தனது அதிருப்தியை வெளியிட்டதோடு, தவறான தகவல்களை உள்ளடக்கி தனது பெயரில் போலியாக வலயக் கல்விப் பணிப்பாளருக்கு எதிராக கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார். தனிப்பட்ட இலாபங்களுக்காக கிளிநொச்சி மாவட்டத்தில் சில அமைப்புகளில் தொடர்ச்சியாக பிரதிநிதிகளாக இருந்து வரும் நபர்களே கல்விப் பணிப்பாளருக்கு எதிராக இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ப-214)

## வழிகாட்டல் செயலமர்வு

பருத்தித்துறை.ஜன.13

பருத்தித்துறை கல்வி வலய முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வழிகாட்டல் செயலமர்வு, வலய கேட்போர் கூடத்தில் நேற்று நடத்தப்பட்டது.

பருத்தித்துறை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆ.ஜென்சன் றொனால்ட் செயலமர்வை நடாத்தினார்.

இதில் கொரோனாத் தொற்று பரவும் விதம் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டது.

செயலமர்வில் 50 வரையான முன்பள்ளிகளின் ஆசிரியர்கள் பங்குபற்றினர். (க-9)

## நவீன வசதிகளுடன் கூடிய 200 பஸ்கள் கொள்வனவு

### அமைச்சரவை அனுமதி

கொழும்பு,ஜன.13

குறுந்தூர சேவைக்காக நவீன வசதிகளுடன் கூடிய 200 புதிய பஸ்களை இலங்கை போக்குவரத்து சபை கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

கொழும்பு மற்றும் நெரிசல் மிகுந்த நகர்ப்பகுதிகளில் நவீன வசதிகளுடன் கூடிய பொதுப் போக்குவரத்து சேவை மற்றும் இலகுவாக நிறுத்தி வைக்கக் கூடிய வசதி கொண்ட பஸ்களை கொள்வனவு செய்வது தொடர்பில் போக்குவரத்து அமைச்சு சமர்ப்பித்த யோசனைக்கே அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (ஐ-இ)

## வாகன விபத்தில் இருவர் காயம்

சாவகச்சேரி,ஜன.13

இ.போ.ச. பஸ்ஸும்,பட்டா ரக வாகனமும் மோதியதில் பட்டா ரக வாகனத்தில் பயணித்த தந்தையும் மகனும் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை ஏ-9 வீதியில் இடம்பெற்றது.

காயமடைந்த இருவரும் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். கொடிகாமம் பெரியநாவலடியைச் சேர்ந்த 42 வயதான தந்தையும், 16 வயதுடைய அவருடைய மகன் ஆகிய இருவருமே காயமடைந்தனர். (ஐ-9)

## ஆறு சாரதிகளுக்கு ரூ.1,40,000 தண்டம்

சாவகச்சேரி, ஜன.13

போக்குவரத்து விதிமுறைகளை மீறி வாகனங்கள் செலுத்திய ஆறு சாரதிகளுக்கு, சாவகச்சேரி நீதிமன்றில் ஒரு லட்சத்து 40 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

மதுபோதையில் சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்திய ஒருவருக்கு 50 ஆயிரம் ரூபாவும், மதுபோதையில் வாகனம் செலுத்திய மூவருக்கு தலா 25 ஆயிரம் ரூபா வீதம் 75 ஆயிரமும் தண்டம் விதிக்கப்பட்டது.

மூவரின் சாரதி அனுமதிப் பத்திரங்களை நீதிமன்றத்தில் தடுத்து வைக்குமாறும் உத்தரவிடப்பட்டது. இவர்களில் இருவர் தமது தொழிலுக்கு சாரதி அனுமதிப்பத்திரம் தேவை என்று சட்டத்தரணி மூலம் கோரியதையடுத்து, இருவருக்கும் மேலதிகமாக தலா 5 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

இதேவேளை வாகன வரிப் பத்திரம் இன்றி வாகனம் செலுத்திய இருவருக்கு தலா 2 ஆயிரத்து 500 ரூபா வீதம் 5 ஆயிரம் தண்டம் விதிக்கப்பட்டது. (க-9)

## இரண்டு....

112 பேர் கடந்த ஒரு வாரத்தினுள் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் இந்த நகர்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் 2 ஆயிரம் பேருக்கு மேற்கொள்ளப்பட்டுள்ள பி.சி.ஆர். சோதனையின் முடிவுகளைப் பொறுத்து மாவட்டம் முழுவதையும் முடக்குவதா இல்லையா என்பது தீர்மானிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. வவுனியா மாவட்டச் செயலகத்தில் கொரோனா தடுப்புச் செயலணியின் கூட்டம் நேற்றுக் காலை இடம்பெற்றது. இந்தக் கூட்டம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் மகேந்திரன்,

வவுனியா பிரதேச செயலர் பிரிவில் 19 கிராம அலுவலர் பிரிவுகளில் முழுமையான முடக்கத்தை மேற்கொள்ளுமாறு மாவட்டச் செயலருக்கு பரிந்துரைத்துள்ளோம். ஏ-9 வீதியில் நொச்சிமோட்டை பாலம் மற்றும் இரட்டை பெரியகுளம் பகுதியில் அமைந்துள்ள நகரசபையின் வரவேற்பு வளைவு, மன்னார் வீதியில் நெளுக்குளம் பொலிஸ் நிலையம் பூந்தோட்டம் சந்தி, மாமடு சந்தி ஆகிய பகுதிகள் பொலிஸாரால் முடக்கப்படும். வவுனியா நகருக்கு உள்ளே வரும் பொதுமக்களுக்கு தடைவிதிக்கப்படும். இன்றிலிருந்து இரண்டு கிழமைகளுக்கு இந்த நடைமுறை நீடிக்கும். அவசர தேவைகள், அத்தியாவசிய தேவைகள் மற்றும் அரச ஊழியர்கள் வந்து செல்வதற்கு அனுமதி வழங்கப்படும். வெளிமாவட்டங்களிலிருந்து வருகை தரும் பேருந்துகள், முடக்கப்பகுதிக்குள் நிறுத்தாமல் செல்வதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றார். இதற்கு அமைவாக வீதித்தடைகள் அமைக்கப்பட்டு பிரதேசங்கள் நேற்றுமுன்தினம் மாலை 3 மணியிலிருந்தே பொலிஸாரால் முடக்கப்பட்டுள்ளன. இதேவேளை வவுனியா நகர கோட்ட எல்லைக்குட்பட்ட 42 பாடசாலைகளும் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளன. முடக்கப்பட்ட பகுதியில் இருந்து இயங்கும் பாடசாலைகளுக்கு செல்லும் ஆசிரியர்கள் கடமைக்குச் செல்லத் தேவையில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-ஓ,110)

## வடக்கில்...

போதனா மருத்துவமனையில் 432 பேரின் மாதிரிகள் சோதிக்கப்பட்டதில் 7 பேருக்கு கொரோனா உறுதிப்படுத்தப்பட்டது. அவர்களில் மன்னாரைச் சேர்ந்தவர்கள் ஐவர். அனைவரும் தனிமைப்படுத்தப்பட்டவர்கள். வவுனியாவில் இருவர் தொற்றுடன் அடையாளப்படுத்தப்பட்டனர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் 249 பேரின் மாதிரிகள் சோதிக்கப்பட்டதில் வவுனியாவைச் சேர்ந்த இருவருக்குத் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது. (ம-26,130)

## விடாது...

மாலை வரையில் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது. இவர்களில் கரைச்சி பிரதேச செயலக பிரிவில் 51 குடும்பங்களைச் சேர்ந்த 158 பேரும், கண்டாவளையில் 80 குடும்பங்களைச் சேர்ந்த 270 பேரும், பூநகரியில் 86 குடும்பத்தைச் சேர்ந்த 253 பேரும், பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் 190 குடும்பங்களைச் சேர்ந்த 597 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் சுமார் ஆயிரம் குடும்பங்கள் வரையில் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. பலநூறு ஹெக்டேயர் வ யல் நில ங்க ளை த ண் ணீ ர் சூழ்ந்துள்ளது. முல்லைத்தீவில் சுமார் 50 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்று தெரியவருகின்றது.

யாழ்ப்பாணம் நகரப் பகுயில் யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் முதல் நேற்றுக் காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் 149.3 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. யாழ்ப்பாணம் நகரப் பகுதியிலேயே அதிகளவு மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. சுமார் ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட குடும்பங்கள் யாழ்ப்பாணத்தில் பாதிக்கப்பட்டிருக்கலாம் என்று தெரியவருகின்றது. (ம-20,214)

## வெள்ளி...

தத் தாழ்வு நிலை காரணமாக எதிர்வரும் 15ஆம் திகதி அதிகாலைவரை அல்லது நாளை இரவு வரை மழை தொடர்ந்து பெய்யும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற்றுறை மூத்த விரிவுரையாளர் நா.பிரதீபராஜா தெரிவித்துள்ளார். (ம-ஓ,5)

## கச்சதீவு...

வுள்ள கச்சத்தீவு புனித அந்தோனியார் தேவாலய திருவிழாவில் இந்திய இலங்கை பக்தர்களுக்குக் கொரோனா அச்சுறுத்தல் காரணமாக அனுமதி வழங்கப்படாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தியத் துணைத் தூதரக அதிகாரி, நெடுந்தீவு பங்குத்தந்தை மற்றும் யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர் உள்ளிட்டோர் இடையிலான ஆலோசனைக் கூட்டத்தில் இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (மஓ,இ)

## ரஞ்சனுக்கு...

திக்கும் வகையில் கருத்து வெளியிட்ட குற்றச்சாட்டில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு 4 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை உயர் நீதிமன்றால் நேற்று விதிக்கப்பட்டது.

சிசிர டி ஆப்ரூ, விஜித் மல்கொட மற்றும் பிரிதி பத்மன் சூரசேன ஆகிய நீதிபதிகள் ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் குழாம் இந்தத் தீர்ப்பை வழங்கியது.

2017ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 21ஆம் திகதி அலரிமாளிகையில் அப்போதைய பிரதமரான ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சு நடத்திய பின்னர் ஊடகங்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க வழங்கிய கருத்தை அடிப்படையாக வைத்து வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அந்தச் சந்தர்ப்பத்தில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன், இலங்கையிலுள்ள பெரும்பாலான நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகள் ஊழல் மோசடி நிறைந்தவர்கள் என்று விமர்சித்தி ருந்தார். இந்தக் கருத்தை அடிப்படையாக வைத்து சிங்கள ராவய அமைப்பின் செயலரான மாகல்கந்தே சுதத்த தேரர் மற்றும் ஓய்வுபெற்ற விமானப்படை சிப்பாய் சுனில் பெரேரா ஆகியோரால் உயர் நீதிமன்றில், நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. ரஞ்சன் ராமநாயக்க நாட்டின் நீதித்துறை மீதான பொதுமக்களின் நம்பிக்கையை குறைமதிப்புக்கு உட்படுத்தியுள்ளார் எனவும், நீதிமன்றத்தை அவமதித்துள்ளார் எனவும் மனுதாரர்கள் மனுவில் குறிப்பிட்டி ருக்கின்றனர். சட்டமா அதிபர் சுமத்திய குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்துக்கிடமின்றி நிரூபிக்கப்படுகின்றது என்று தெரிவித்து, 4 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனையை நீதிபதிகள் வழங்கினர்.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள நாடாளுன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க சிறைக்கு செல்லமுன் 14 நாள்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார். இதற்காக அவர் கம்பஹாவில் உள் பல்லன் சேன மறுவாழ்வு மையத்துக்கு தனிமைப்படுத்தல் மற்றும் கொரோனா பரிசோதனைக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளார் என்று சிறைத்தலைமை யகம் தெரிவித்துள்ளது. (மஓ,இ)

## இப்படியும்..

களை திருடிச் சென்றுள்ளார். வீட்டார் பெண்ணின் நடத்தையில் சந்தேகமடைந்து அவரை, ஊரவர்களுடன் சேர்ந்து விரட்டிப் பிடித்து வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று மதியம் இடம்பெற்றது. தொண்டைமானாறு பகுதியில் பெண் ஒருவர் பல வீடுக ளுக்குச் சென்று வந்துள்ளார். அவர் தான் பொதுச் சுகாதார பரிசோதகர் என்றும், தாதிய உத்தியோகத்தர் என்றும், வெள்ள இடர் தொடர்பான விவரங்க ளைச் சேகரிக்க வந்தவர் என்றும் பல்வேறு விடயங்களைக் கூறி நோட்டம் விட்டுள்ளார்.

ஒரு வீட்டினுள் சென்று வெள்ளம் தொடர்பான ஒளிப்படங்களை எடுத்துள்ளார். பின்னர் மழை வரப் போகின்றது, தனக்கு உடைமாற்ற இடம் தருமாறு கேட்டுள்ளார். வீட்டாரும் அறையினுள் உடை மாற்ற அனுமதித்துள்ளனர். உடை மாற்றிவிட்டு சிறிது நேரத்தில் வெளியில் வந்துள்ளார். வீட்டாரிடம், தனக்கு சாப்பாடு கொண்டு வந்துள்ளார்கள் என்று கூறிக் கொண்டு வீதிக்கு வேகமாகச் சென்று மோட்டார் சைக்கிளில் இன்னொருவருடன் தப்பிச் சென்றுள்ளார். இதனால் சந்தேகமடைந்த வீட்டார், அறையினுள் சென்று பார்த்த போது தாலிக் கொடி, 3 மோதிரங்கள், ஒரு சோடி காப்பு என்பன திருடிச் செல்லப்பட்டமை தெரியவந்தது. உடனே ஊரவர்களின் உதவியுடன் அவரை விரட்டிச் சென்றுள்ளனர். பலாலி பொலிஸ் நிலையத்தை அண்மித்த பகுதியில் வைத்து அவரை மடக்கிப்பிடித்துள்ளனர். வல்வெட்டித்துறைப் பொலிஸாரிடம் அவர் ஒப்படைக்கப்பட்டார். சிங்கள மொழியிலும் அந்தப் பெண் சரளமாக உரையாடுகின்றார். அவரது கைப்பையில், திருடப்பட்ட நகைகள் காணப்பட்டன எனப் பொலிஸார் கூறுகின்றனர். மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ஓ,26)

## அரசியல்...

சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதியான இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் பணிப்பாளர் சபை உறுப்பினர் கனகசபை தேவதாசன் (வயது 64) கடந்த 6ஆம் திகதி முதல் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

இவருடைய உடல்நிலை கவலைக்கிடமாக இருப்பதால் அவரது கோரிக்கையை நிறைவேற்ற உரிய தரப்பு விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தனது உறவுகளிடம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார் என்று அவரின் உறவுகள் குரலற்றவரின் குரல் அமைப்புக்கு தெரியப்படுத்தியுள்ளனர்.

மேல் நீதிமன்ற வழக்குகளில் முறையே 20 ஆண்டுகள் மற்றும் ஆயுள் தண்டனை தீர்ப்பை எதிர்த்து என்னால் மேன்முறையீட்டு நீதிமன்றில் தொடுக்கப்பட்ட இரண்டு வழக்குகளிலும் எனக்காக வாதாட அனுமதி பெற்றேன்.

ஒரு வழக்கு கடந்த 4 ஆண்டுகளாகவும் மற்றைய வழக்கு கடந்த இரண்டு ஆண்டுகளாகவும் விசாரணைக்கு எடுக்காமல் தவணையிடப்படுகிறது.

கொரோனா பரவலால் தற்பொழுது 2 வழக்குகளும் முற்றாக முடங்கி விட்டன. சிங்களம் தெரியாத சிறைக்கைதியாக நான் உள்ளதால் அதிக சிரமத்தை சந்திக்க வேண்டியுள்ளது. என் அடிப்படை உரிமை மீறப்படுகிறது.

மேலும் கடந்த பல மாதங்களாக உடல் நோயால் அவதிப்படுகிறேன். கழுத்துப் புண், வலது கை மற்றும் கால் விறைப்பும் நடுக்கமும் இருக்கிறது. மேலதிக சிகிச்சை இன்றி சிறைக்குள் உள்ளேன். மேன்முறையீட்டு வழக்குகள் இரண்டிலும் துரித விசாரணை சாத்தியமில்லையாயின், நான் பிணை அனுமதி பெற ஆவண செய்து தருமாறுகோரி கடந்த 6ஆம் திகதி முதல் நீராகாரம் மட்டும் அருந்தி உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளேன். மேல் நீதிமன்ற வழக்குகளில் விசாரணையை விரைவாக முடிவுக்கு கொண்டுவந்ததை போலவே என்னால் தொடுக்கப்பட்ட மேன் முறையீட்டு வழக்குகளையும் விரைந்து முடிவுக்கு கொண்டுவர விரும்பியே எனக்காக நான் வாதாட விண்ணப்பித்தேன். தமிழில் சமர்ப்பணம் செய்யவும் விவாதிக்கவும் அனுமதி தரப்பட்டது.

மேன்முறையீட்டு வழக்கில் என் சமர்ப்பணத்தை 3 பக்கங்களில் தமிழில் கையளித்தேன். அதனை இன்னமும் மொழிபெயர்ப்பு செய்யவில்லை எனக் காரணம் காட்டியபடி மன்று தவணையிட்டு வந்தது. இதனால் சட்டமா அதிபர் தரப்பின் சமர்ப்பணம் இன்னும் கோரப்படவில்லை. விவாதத்துக்கும் திகதியிடப்படவில்லை. மற்றைய வழக்கில் இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக எதுவும் நடைபெறவில்லை.

கடந்த ஆண்டின் இரண்டாம் காலாண்டில் இருந்து கொரோனா தொற்று காரணமாக மேற்படி இரண்டு வழக்குகளும் முடங்கி விட்டன. சிறையில் இருக்கும் என் சமூகமின்றியே தவணைத் திகதியிடுவது மட்டுமே தொடர்ச்சியாக இடம்பெறுகிறது. இது மேலும் இப்படியே தொடருமாயின் இந்த இரண்டு வழக்குகளும் தள்ளுபடியாகும் அபாயமும் நிலவுகிறது. அரசமைப்பில் உத்தரவாதமளிக்கப்பட்ட மொழியுரிமை மற்றும் அடிப்படை உரிமை என் விடயத்தில் அப்பட்டமாக மீறப்படுகின்றது. இது தொடர்பில் கடிதம் எழுதியும் பலனளிக்கவில்லை. இதனால் நான் மிகவும் பாதிக்கப்படுகிறேன். கொரோனாத்தொற்று எப்பொழுது முடிவுக்கு வரும் என்பது யாருக்கும் தெரியாத நிலையில் சட்ட நடவடிக்கையின்றி சிறை இருப்பதில் எவ்வித அர்த்தமும் இல்லை.

நிரபராதியென நிரூபிக்கும் வாய்ப்பு எனக்கு மறுக்கப்படுவது அநீதி. சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு அரசிடம் கோருவது தவறா?. கொரோனா அபாயத்தின் மத்தியில் உண்ணாவிரதம் இருந்து நானாகவே என் நோய் எதிர்ப்புசக்தியை இழந்து வருகிறேன். எனக்கு எவரதும் அனுதாபமோ வாக்குறுதியோ வேண்டாம். நீதி மட்டுமே வேண்டும் என்று தனது உறவுகளிடம் அவர் தெரிவித்துள்ளார், எனக் குரலற்றவர்களின் குரல் அமைப்பு அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஓ,இ)

## தொற்றுப் பரவல்; விழிப்புடன் இருக்கவும்

மேல்மாகாணம் உட்பட நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு கொரோனாத் தொற்று பரவத்தொடங்கியுள்ளது என தொற்று நோயியல் பிரிவின் தலைமை அதிகாரி சுடத் சமரவீர தெரிவித்தார். மேல்மாகாணத்திலும் கொழும்பிலும் வைரஸ் கட்டுப்படுத்தப்பட்டுள்ள போதிலும் சில பகுதிகளில் புதிய தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என அவர் தெரிவித்தார். இதனை நாங்கள் எவ்வாறு கையாள்கின்றோம் என்பதே முக்கியமானது. எனினும் வைரஸைக் கட்டுப்படுத்த முடியும் என நம்பிக்கை வெளியிட்ட அவர் வியாழக்கிழமை முதல் நீண்ட விடுமுறைகள் வருவதன் காரணமாக மக்கள் தங்கள் பகுதிகளிலிருந்து வேறு இடங்களுக்கு செல்லாமல் அவதானத்துடன் இருக்குமாறும் அவர் மேலும் தெரிவித்தார். (ரி5)

## 32 பாடசாலைகள் மூடல்

மட்டக்களப்பு, ஜன. 13

கிழக்கு மாகாணத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்களிலுள்ள 32 பாடசாலைகளை மறு அறிவித்தல் வரும் வரை தொடர்ந்து மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

காத்தான்குடியில் உள்ள 25 பாடசாலைகள், கல்முனையில் 5, திருக்கோவிலில் 1, அம்பாறையில் ஒரு பாடசாலை என 32 பாடசாலைகள் மீள் அறிவித்தல் வரும்வரையில் மூடப்பட்டுள்ளன. ஏனைய பாடசாலைகள் நேற்று முன்தினம் முதல் கற்றல் நடவடிக்கைகளுக்காக திறக்கப்பட்டுள்ளன. (ரி5)

# சுற்றுலாவிகளால் நாட்டில் கோவிட் தொற்று பரவாது!

### கூறுகிறார் அமைச்சர் பிரசன்ன



கொழும்பு, ஜன.13

**வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளால் நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று பரவலடையாது எனத் தெரிவித்த சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, உக்ரைன் நாட்டு பயணிகள் நாட்டுக்கு வருவதைத் தடுக்க முடியாது என்றும் தெரிவித்துள்ளார்.**

மேலும், கொரோனா வைரஸ் தாக்கம் எப்போது முடிவுக்கு கொண்டுவரப்படும் என குறிப்பிட முடியாது. எனவே கொரோனாத் தாக்கத்தால் எழுந்துள்ள சவால்களை சுகாதார பாதுகாப்பு அறிவுறுத்தல்களுக்கு மத்தியில் வெற்றிகொள்ள வேண்டும்.

பிரித்தானிய நாட்டு பிரஜைகள் நாட்டுக்குள் வருவதற்கு மாத்திரமே தற்போது தடை விதிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலாப் பயணங்களை மேற்கொள்வதை தடுக்கும் தீர்மானத்தை சுகாதார தரப்பினரும், கொவிட்-19 வைரஸ் தொடர்பான தொழில்நுட்ப குழுவினரும் மாத்திரமே எடுப்பார்கள். உலக சுகாதார ஸ்தாபனம் மற்றும் சர்வதேச விமான சேவைகள் அமைப்பு ஆகிய அமைப்புக்களின் பரிந்துரைகளுக்கு அமையவே சுற்றுலாத்துறை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நாட்டுக்குள் வரும் சுற்றுலாப் பயணிகள் சுகாதார பாதுகாப்பு வழிமுறைகளை கட்டாயம் பின்பற்ற வேண்டும். இதனை சுற்றுலா சேவை முகவர்களுக்கு தெளிவாக குறிப்பிட்டுள்ளோம் - என்றார். (ந-இ)

**வேலைக்கு ஆள்கள் தேவை**
அலுவலக வேலைக்கு பெண் ஊழியர் தேவை
* Ms Office
* English (Well Written)
077 933 2640

**வேலையாட்கள் தேவை**
முறுகண்டியில் இயங்கும் தனியார் சைவ உணவகத்திற்கு
✲ காசாளர்
✲ உணவு பரிமாறுபவர்
✲ முகாமையாளர்
உடன்தேவை (இருபாலாரும்)
தொடர்பு: 077 386 6250

**பணிப்பெண் தேவை**
யாழ்ப்பாணத்தில் வீட்டில் தங்கியிருந்து வேலை செய்ய பணிப்பெண் தேவை.
077 998 8066

## பொங்கல் பொருள் வழங்கல்

கொழும்பு, ஜன.13

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு கொடிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர்கள் மற்றும் பணியாளர்கள் 300 பேருக்கு பொங்கல் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

கொடிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தால், சங்க மண்டபத்தில் வைத்து அந்தப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (ப-9)

## சுகாதார விதிமீறல்: கைதுகள் அதிகரிப்பு

கொழும்பு, ஜன.13

மேல் மாகாணம் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் கடந்த 24 மணித்தியாலங்களில் தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறிய 23பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதிப்பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார். இவர்கள் அனைவரும் சுகாதார விதிகளை மீறிய குற்றச்சாட்டுக்களின் அடிப்படையிலேயே கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும், அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இதற்கமைய கடந்த வருடத்தின் ஒக்ரோபர் மாதம் முதல் இதுவரையிலான காலப்பகுதி வரையில் சுகாதார விதிகளை மீறினர் என்ற குற்றச்சாட்டில் 2ஆயிரத்து 438 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

## மரண அறிவித்தல்



தோற்றம் 21 . 07 . 1945 — மறைவு 11 . 01 . 2021

### திரு. கதிரவேலு செல்லப்பா (செல்வராசா)

**(பரந்தன் இரசாயன கூட்டுத்தொழிற்சாலையின் முன்னாள் உத்தியோகத்தர்)**

சிறுப்பிட்டி வடக்கை பிறப்பிடமாகவும், கனடா ரொறன்ரோவை வசிப்பிடமாகவும், பரந்தன் இரசாயன கூட்டுத்தொழிற்சாலையின் முன்னாள் உத்தியோகத்தருமாகிய திரு கதிரவேலு செல்லப்பா (செல்வராசா) அவர்கள் (11.01.2021) திங்கட்கிழமையன்று மாரடைப்பால் இறைபதமடைந்தார்.

அன்னார் அமரர்களான கதிரவேலு காந்தம்மா தம்பதியரின் அன்பு மகனும், அமரர்களான முருகேசு சின்னாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும், வள்ளியம்மையின் பாசமிகு கணவரும், கந்தசாமி, திருமலர், பாலசுந்தரம், சிவசாமி, சோமசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சத்தியதேவி, சின்னத்துரை, பத்மலோசனா, வசந்தி, தர்சினி, அமரர் கந்தையா, சண்முகம், பொன்னம்மா, சின்னத்தங்கச்சி, அமரர் சிவக்கொழுந்து ஆகியோரின் மைத்துனரும், ரேணுகாதேவி, ரங்கநாதன், செந்தில்நாயகி, கிருபாநந்தி, கோகுலன், ஜானகி (சிறுப்பிட்டி) ஆகியோரின் மாமனாரும், வேணுதாஸ், லோகவேணி, திருவேணி, தனுசன், ரனோஜா, அபினயா, பிரவீனா, சகானா, எழில்நிலா, இலக்கியன், ஓவியா ஆகியோரின் பெரியப்பாவும், ஆரன், நிகரன், ஷாக்சவி, ஸ்ருதிகா, ஆதனா, இனியா, ஆதித்தன், ஆதிரா மற்றும் வைஸ்ணவி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (17.01.2021) ஞாயிற்றுக்கிழமை ஸ்காபரோ, கனடாவில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**077 5000410 (இலங்கை)**
**077 8286867 (இலங்கை)**
**0016478573881 (கனடா)**

**தகவல்: மருமகள். சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி.**

## 12ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 10 . 05 . 1960 — இறப்பு 28 . 12 . 2008

### சேனாதிராஜா தயாளன்

**(மின்சார சபை ஊழியர்)**

அன்பிலே சிறந்தவராய்
மண்ணிலே உதித்து
அமைவற்ற வாழ்வினில்
நறுமணம் பரப்பி
இல்லத்தின் விருட்சமாய்
உறவுகள் பேணிடும்
கருணை வடிவமாய்
உரிமையாய் உணர்வை அன்பாய் பகிர்ந்தே
விண்ணகவாழ்வை நாடியே சென்றீர்கள்

**குடும்பத்தினர், நீர்வேலி வடக்கு, நீர்வேலி.**

# பொறுப்புக்கூறலை சபைக்குள் முடக்கும் நகர்வுக்கு எதிர்ப்பு!

கிளிநொச்சி, ஜன.13

இறுதிப் போரின் போதான குற்றங்கள் தொடர்பில் இலங்கை அரசின் பொறுப்புக்கூறலை, ஐ.நா. மனித உரிமைகள் சபைக்குள் முடக்கும் நகர்வுகளுக்கு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில், வடக்கு கிழக்கு மாகாண வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் பணிப்பாளர் திருமதி பத்மநாதன் கருணாவதி தெரிவித்த தாவது:

மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் இலங்கையைப் பொறுப்புக்கூற வைக்கும் தீர்மானத்துக்கு ஒரு வருட கால அவகாசம் வழங்கும் நிலைப்பாட்டை நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரனும், அவருக்குப் பின்னால் இருப்பவர்களும் கொண்டு வந்துள்ளார்கள். இதனைக் கண்டிக்கின்றோம்.

குற்றங்கள் இழைத்தவர்களை வலிந்து பதிலளிக்கக் கூடிய சிறப்பு விசாரணைப் பொறிமுறையொன்று உருவாக்கப்படல் வேண்டும். அந்தப் பொறிமுறையானது மியன்மார் அல்லது சிரியா விடயங்களை கையாள்வதற்காக அமைக்கப்பட்ட சர்வதேசபுலனாய்வு விசாரணைப் பொறிமுறையை ஒத்ததாக அமைய வேண்டும்.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் 1998ஆம் ஆண்டு ரோம் சாசனத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டதாகும். இலங்கை ரோம் சாசனத்தில் கையொப்பமிடாத நாடு என்ற காரணத்தாலேயே தமிழர்களால் இன்று வரை எதுவும் செய்ய முடியவில்லை.

ஆனாலும் மாற்று வழிகள் உண்டு. பாதுகாப்பு சபை தமிழர்கள் பிரச்சினையை பரிந்துரை செய்யும் பட்சத்தில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் எமக்கான நீதியைப் பெற்றுத்தர முடியும். அதை விட ரோம் சாசனத்தில் கையொப்பமிட்ட அரசுகளின் பரிந்துரை அடிப்படையிலும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் குற்றவாளிகளை விசாரணை செய்து தண்டனை கொடுக்க முடியும். கட்டமைப்புசார் இனப்படுகொலையை முடிவுக்குக் கொண்டு வருவது, அதைச் செய்தவர்களைத் தண்டித்தல் மற்றும் தொடர்புடைய ஆதாரங்களை பாதுகாத்தல் என்பது போன்ற விடயங்கள் தொடர்பில் ஒரு அரசு, இலங்கை மீது வழக்கு பதிவு செய்ய முடியும்.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் தனி நபர்களை மாத்திரமே நிறுத்த முடிகின்ற அதேவேளை, ஐ.நாவின் சர்வதேச நீதிமன்றில் இலங்கை அரசை நிறுத்த முடியும் என்பதை தெளிவாகப் புரிந்துகொண்ட நாம், தமிழர்கள் வாழ்கிற ஒவ்வொரு நாடும் இந்த விடயம் தொடர்பாக அந்தந்த அரசுகளிடம் அழுத்தம் கொடுக்க வேண்டிய இடத்தில் இருக்கிறோம்.- என்றார். (ஒ - 6)

*சுகாதார விதிமுறைகளை மீறும்*

# ஆலய நிர்வாகத்தினருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

## வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

வவுனியா, ஜன.13

**கொரோனாத் தொற்றுக் காரணமாக நடைமுறைப்படுத்தப்படும் சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடிக்காத ஆலய நிர்வாகத்தினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.**

வவுனியாவில் கொரோனாத் தொற்று அதிகரித்துவரும் நிலையில் இது தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போது "எதிர்வரும் தைப் பொங்கல் தினத்தை முன்னிட்டு ஆலயங்களுக்கு வருகைதரும் பொதுமக்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் நிலை ஏற்படும். இந்த சந்தர்ப்பத்தில் தங்களாலும் அதனைக் கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்படும். எனவே இது தொடர்பாக ஆராயவேண்டும்" என்று இந்து மதகுரு ஒருவரால் கருத்து முன்வைக்கப்பட்டது.

அதற்கு பதிலளிக்கும் போதே வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஆலயங்களில் பூசை நடைமுறைகள் தொடர்பாக ஆலய நிர்வாகத்தினருக்கு உரிய முறையில் ஏற்கனவே தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. எனவே அந்த சுகாதார நடைமுறைகள் மீறப்படும் பட்சத்தில் அந்த ஆலயங்களின் நிர்வாகத்தினருக்கு எதிராக கொரோனா விதிமுறைகளின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (ஐ-110)

# வியாழேந்திரன் உட்பட ஐவருக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

மட்டக்களப்பு, ஜன.13

இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் உள்ளிட்ட ஐவருக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கு வரும் பெப்ரவரி 9ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு சீயோன் தேவாலய தற்கொலை குண்டுதாரியின் உடற்பாகங்களை இந்துமயானத்தில் புதைத்ததற்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் உள்ளிட்ட 5 பேருக்கு எதிராக பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

அந்த வழக்கு நேற்று மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் விசாரணைக்காக எடுக்கப்பட்டது. விசாரணைகளின் போது அமைச்சர் உள்ளிட்ட 5 பேரும் முன்னிலையாகினர். இதன் பின்னர் வழக்கு எதிர்வரும் பெப்ரவரி 9ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் கடந்த 2019 ஏப்ரல் உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதலில் சிறுவர்கள் உட்பட பலர் உயிரிழந்தனர். அந்த குண்டுத்தாக்குதலை மேற்கொண்ட காத்தான்குடியைச் சேர்ந்த தற்கொலைக் குண்டுதாரியான ஆசாத்தின் உடற்பாகத்தை கள்ளியன்காடு இந்து மயானத்தில் பொலிஸார் புதைத்தனர். இதன் போது இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் உள்ளிட்ட ஐவர் உடற்பாகத்தை அங்கு புதைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டம் செய்தனர். இது தொடர்பிலேயே பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். (ப)

# வீட்டின் மீது வீழ்ந்தது மரம்

பூநகரி, ஜன.13

கனமழையுடன் வீசிய கடுங்காற்று காரணமாக பெரும் மரம் ஒன்று முறிந்து வீழ்ந்ததில் வீடு ஒன்று சேதமடைந்தது. வீட்டினுள் உறங்கிக் கொண்டிருந்த இரண்டு மாதங்களேயான குழந்தை தெய்வாதீனமாக உயிர் தப்பித்தது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் கிளிநொச்சி, பூநகரி, பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட நாச்சிக்குடா இரணைமாதாநகர் பகுதியில் இடம்பெற்றுள்ளது. (ப-9)

# உடைப்பதற்கும் மீளமைப்பதற்கும் இது வெறும் கல்லும் மண்ணுமல்ல

## தமிழர்களின் உணர்வு என்கிறார் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா

கொழும்பு, ஜன.13

ஆத்மார்த்தமாக தமிழரின் பிரச்சினையைப் புரிந்து விளங்கிக்கொள்ளாத யாரிடமிருந்தும் தமிழருக்கான திருப்திகரமான தீர்வு கிடைக்காது. இந்தத் தத்துவத்தை நடைமுறையில் பல்வேறு எடுகோள்களையும் உதாரணங்களையும் கண்முன்னால் நிகழ்கின்ற நிகழ்வுகளின் அடிநாதத்திலிருந்தும் எடுத்துக்காட்ட முடியும். இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கொழும்புக் கிளைத் தலைவர் கே.வி.தவராசா.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது-

வெற்றிக் கொண்டாட்டங்கள் இடம்பெறற அவை சரிகாணப்பட்டன. அதே நாள் தமிழ் மக்கள் நினைவேந்துவது தவறாகப் பார்க்கப்பட்டு தடைசெய்யப்பட்ட விடயமாகின்றது.

ஒரே நாட்டில் தமது உரிமைகளை உறுதிப்படுத்த இறுதித் தேர்வாக ஆயுதப் போரைத் தேர்வு செய்து போராடிய மக்கள் குழுமத்தைத் தோற்கடித்துவிட்டு வெற்றிச் சின்னத்தை நிறுவி அதைக் கொண்டாடும் மனநிலையில் இருக்கின்ற மக்களின் எண்ணப்பாட்டில் மாற்றம் வராத வரைக்கும் தமிழரின் பிரச்சினையின் அடிநாதத்தை இவர்களால் புரிந்து கொள்ள முடியாது. அவர்களது பார்வையில், கொல்லப்பட்டது தம் சொந்த மக்கள் என்பதை ஏற்றுக் கொள்ளத் தயாரில்லாத மனநிலையின் வெளிப்பாடுதான் என்பதை மிக இலகுவாக அடையாளப்படுத்த முடிகின்றது.

இந்தப் புரிதலின் பின்னணியில் இருந்து தான் யாழ். பல்கலைக்கழகத்தில் அமையப்பெற்ற முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி தகர்க்கப்பட்டிருக்கின்ற சம்பவத்தைப் பார்க்கவேண்டியிருக்கின்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பணிப்பின் பேரில் தூபி உடைக்கப்பட்டதாக உபவேந்தர் சொல்கின்றார்.

நினைவுத் தூபியை உடைத்தல் என்பது பல்கலைக்கழக நிர்வாகத்தின் முடிவே தவிர அது தமது ஆணையல்ல என்கிறார் ஆணைக் குழுவின் தலைவர்.

மீள அமைப்பதற்கு இசைவுடன் செயற்படத் தயார் என்று மீளவும் உபவேந்தர் கூற, பல்கலைக்கழகத்தில் வேறுபாடுகளைப் புகட்டும் போர் சின்னங்கள் தவிர்க்கப்படல் வேண்டும் என்றார் ஆணைக்குழுவின் தலைவர்.

பல்கலைக்கழக வளாகத்தில் எது இருக்க வேண்டும் எது இருக்கக்கூடாது என்பதை தீர்மானிக்கும் அதிகாரம் உபவேந்தருக்கு உண்டு என்றார் ஊடக அமைச்சர்.

மாணவர்களின் போராட்டத்தைக் கட்டுப்படுத்தி சட்ட ஒழுங்கை நிலைநிறுத்தவே பொலிஸார் அழைக்கப்பட்டனர் என சட்டஒழுங்கு அமைச்சர் சொல்கின்றார். பொலிஸாரின் வேண்டுகோளுக்கிணங்க விசேட அதிரடிப்படையே அழைக்கப்பட்டது, உடைப்புக்கும் இராணுவத்துக்கும் சம்பந்தமில்லை என்கிறார் இராணுவத் தளபதி.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக இந்தப் பிரச்சினையில் பார்க்கவேண்டிய மற்றுமொரு பக்கம் இருக்கின்றது.

உடைப்பதற்கும் மீளக் கட்டுவதற்கும் இது வெறும் கல்லும் மண்ணுமல்ல, இது தமிழர்களின் உணர்வு என்பதை அனைத்துத் தரப்பினரும் புரிந்து கொள்ள வேண்டும் என்றுள்ளது. (ஒ-5)



# பொங்கல் வியாபாரம் மந்தம்

## மன்னார் வியாபாரிகள் கவலை

மன்னார், ஜன. 13

ஒவ்வொரு பொங்கல் பண்டிகைக் காலங்களிலும், மன்னார் நகரில் வியாபாரம் களை கட்டும் இந்த வருடம் பொங்கல் வியாபாரம் என்று எதுவும் இல்லை என்று மன்னார் வியாபாரிகள் கவலை தெரிவித்தார்கள்

இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;

ஒரு பக்கம் கொரோனாவால் அனைத்துச்செயற்பாடுகளும் முடக்கப்பட்டுள்ளதுடன் தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழையால் வியாபார நடவடிக்கைகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன. கடந்த வருடம் கொரோனா பெருமளவு தாக்கத்தை ஏற்படுத்த முன்பு இடம்பெற்ற பொங்கல் வியாபாரமே எமக்கு பண்டிகைக் கால கடைசி வியாபாரம். இன்று வரை எமது வியாபாரம் மந்த நிலையிலேயே உள்ளது -என்றனர். (ப-213)

# அலுவலக கடமை நேரத்தில் மாற்றம்?

கொழும்பு,ஜன.13

அலுவலக கடமை நேரத்துக்குப் பதிலாக நெகிழ்வான (Flexible) கடமை நேரத்தைத் தீர்மானிப்பது தொடர்பில் அரசு கவனம் செலுத்தியுள்ளது.

பாடசாலை முதலாம் தவணை ஆரம்பமானதைத் தொடர்ந்து, பெற்றோர் தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதற்கு ஆர்வம் கொண்டுள்ளனர்.

தற்போதைய கொரோனாத் தொற்று நிலைமைக்கு மத்தியில் தமக்குரிய வானகங்களில் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதில் கவனம் செலுத்தியுள்ளனர்.

இதனால் வீதிகளில் வாகன நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதற்கு மாற்றாக பாடசாலை நேரம், அலுவலகங்களில் கடமைகளை ஆரம்பிப்பதற்கான நேரங்களில் மாற்றங்களை மேற்கொண்டால், வீதி நெருக்கடிகளைத் தடுக்க கூடியதாக இருக்கும் என்று கேள்வி எழுப்பப்பட்டது.

அமைச்சரவை இணைப்பேச்சாளரும், அமைச்சருமான உதய கம்மன்பில இதற்குப் பதிலளித்துள்ளார்.

பாடசாலைகள் 7.30 மணிக்கு காலை ஆரம்பமாகின்றது. அதற்காக அலுவலகங்களில் 8 மணிக்கு கடமை நேரம் ஆரம்பமாகின்றது. வர்த்தக நிலையங்கள் 9 மணி அல்லது 9.30 மணிக்குத் தமது கடமைகளை ஆரம்பிக்கின்றன. இருப்பினும், தற்போதைய சூழ்நிலையில் இந்த நேரமாற்றம் தொடர்பில் அரசு கவனம் செலுத்தியுள்ளது. வாரத்தில் 40 மணித்தியாலயங்கள் கடமை நேரத்தை முழுமைப்படுத்துவதில் தொழில்நுட்ப உதவிகளைப் பயன்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளது. வெளிநாடுகளில் இவ்வாறான நடைமுறைகள் உள்ளன என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (க-இ)

### கைதி தப்பிக்க உதவிய குற்றச்சாட்டு;

# சிறைக் காவலர்கள் உள்ளிட்ட மூவர் பணியிலிருந்து நீக்கம்

கொழும்பு, ஜன.13

வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதியொருவர் சட்டவிரோதமாக விடுவிக்கப்பட்டமை தொடர்பில் சிறைக் காவலர்கள் இருவர் உட்பட மூவர் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். போலியான ஆவணங்களைத் தயாரித்த குற்றச்சாட்டில் குறித்த நபர் வெலிக்கடைச் சிறைச் சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் அவர் கடந்த 25ஆம் திகதி சிறைச்சாலை அதிகாரிகளின் உதவியுடன் சிறைச்சாலையில் இருந்து வெளியேறினார் என்று தெரிவிக்கப்படுகிறது. குறித்த சம்பவம் தொடர்பில் குற்றப்புல னாய்வுத் திணைக்களம் விசாரணை களை ஆரம்பித்த நிலையில், சிறைச்சாலை திணைக்களத்தினாலும் விசாரணை முன்னெடுக்கப்பட்டது. சிறைச்சாலைத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கு அமைய கைதி சிறைச்சாலையில் இருந்து தப்பிச் செல்வதற்காக சிறைக் காவலர்கள் உட்பட மூவர் உதவி புரிந்தனர் என்று தகவல் வெளியானது என்று சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார். எனவே ஒழுக்காற்று விசாரணை களுக்கு அமைவாக அவர்கள் மூவரும் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்றும் சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (ப)

முதலாம் பக்கத் தொடர்ச்சி

## முள்ளியவளை...

திகதி கிணற்றில் இருந்து மீட்கப்பட்ட சடலம் கொலை செய்யப்பட்டு வீசப்பட்டுள்ளது என்று சட்ட மருத்துவ வல்லுநரின் ஆய்வில் வெளிப்பட்டுள்ளது.

மிகவும் உருக்குலைந்த நிலையில் காணப்பட்ட அந்தச் சடலம் குறித்த பகுதியால் மாடு மேய்க்கச் சென்றவரால் அடையாளம் காணப்பட்டது. இதையடுத்து பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டு முல்லைத்தீவு நீதிவான் பா.லெனின்குமார், சட்ட மருத்துவ அதிகாரி செல்லையா பிரணவன் ஆகியோர் முன்னிலையில் மீட்கப்பட்டது.

மனித எச்சங்கள் மன்னார் சட்ட மருத்துவ வல்லுநர் செல்லையா பிரணவனால் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. இதில் குறித்த நபர் நெஞ்சில் கூரிய ஆயுதத்தால் வெட்டிக் கொலைசெய்யப்பட்டிருக்கலாம் என்று கண்டறியப்பட்டது. அதனடிப்படையில் முள்ளியவளைப் பகுதியில் குறித்த காலப்பகுதியில் காணாமல் போனவர் தொடர்பில் மரபணுப் பரிசோதனை செய்வதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ம)

## வடிவம்....

துரையாடப்படும். அந்தத் தூபி நிச்சயமாகப் பெயரைக் கொண்டிருக்கும். இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் சிறிசற்குணராஜா தெரிவித்தார்.

ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு துணைவேந்தர் வழங்கிய செவ்வியில், இடிக்கப்பட்ட நினைவுத் தூபியை மீளக்கட்டி அமைதிக்கான நினைவுத் தூபியாக அறிவிக்க முடிவு செய்துளளோம். புதிய தூபி பழையதைப் போன்றே அமைப்பில் ஒத்திருக்கும்.

ஆனால் பதிவுகளில் அமைதிக்கான தூபியாக அழைக்கப்படும். எனினும் குறித்த தூபியானது அமைதிக்கான தூபியா போர் நினைவுத் தூபியா என்று அறிவிக்கும் எந்தவொரு எழுத்தும் இருக்காது என்று குறிப்பிட்டார் என்று அந்தச் செவ்வியில் கூறப்பட்டிருந்தது.

இது தொடர்பில் துணை வேந்தரை தொடர்புகொண்டு கேட்டபோது, தூபி அமைப்பது தொடர்பில் உரிய தரப்பினருடன் கலந்துரையாடியே நடவடிக்கை எடுக்கப்படும். அமைக்கப்படும் தூபி நிச்சயம் பெயரைக் கொண்டிருக்கும், என்றார்.

இதேவேளை அமைக்கப்படுவது சமாதானத் தூபியா என்று கேட்டதற்கு, இப்போது அவசரம் தேவையில்லை. சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பேசி உரிய வகையில் அது அமைக்கப்படும் என்று பதிலளித்தார். (ம-ஒ,5)

**காணி தேவை**

யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், மானிப்பாய் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பிரதேசத்திற்குள் 10 தொடக்கம் 30 வரையான பரப்பளவு காணி தேவை. தரகர் தேவையில்லை.

தொடர்புகொள்ளவும்: **076 2212 037**

**கமராக்கள் தேவை**

நல்ல நிலையில் உள்ள, உபயோகித்த DSLR கமரா, வீடியோ கமராக்கள் தேவை. விற்பனைக்கு வைத்திருப்போர் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: **0762276722**

**காணி விற்பனைக்கு**


யாழ்ப்பாணம் இராசபாதை வீதியில் ராசபாதை சந்தியில் இருந்து 500 m தூரம். மெயின் றோட்டுடன் 06 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. 2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.

தரகர் தேவையில்லை.

குரு:- **077 805 1655**
**077 288 0152**
**077 505 8561**

# மரண அறிவித்தல்

## சின்னையா நடராசா



சுன்னாகம் மேற்கைப் பிறப்பிடமாகவும் முத்துகிறிஸ்ணர் வீதி, சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா நடராசா நேற்று (12.01.2021) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா சிவக்கொழுந்து தம்பதிகளின் மூத்த புதல்வனும், காலஞ்சென்ற சின்னத்துரை இராசம்மா தம்பதிகளின் மூத்த மருமகனும், இராஜேஸ்வரியின் பாசமிகு கணவரும், வாமினி (ஆசிரியை- தெல்லிப்பளை சைவப் பிரகாச வித்தியாசாலை) வனிதா (கனடா), வனஜா (பிரான்ஸ்), வசீதரன் (லண்டன்), வசந்தகுமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மணிவண்ணன் (சிறிலங்கா ரெலிகொம் - யாழ்ப்பாணம்), தவனேசன் (கனடா), சிறீஸ்வரன் (பிரான்ஸ்), தர்சினி (லண்டன்), ரவிப்பிரியா (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.01.2021) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்.



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.01.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.